5-7





## நவீன முறையில் படப்பிடிப்பு

- பெருப்பித்தல்,
- வர்ணந்தீட்டுதல்,
- புளொக் செய்தல்.

## மற்றும் படப்பிடிப்பு (Photography)

சம்பந்தமான விஷயங்களில் உங்களுக்குத் திருப்தியளிக்கக் கூடிய ஸ்தாபனம்.

சொந்தக்காரர்:- J. A. பேரின்பநாயகம்.

## சோர்வை நீக்கி

## உற்சாகத்தை ஊட்டுவது



786 கல்கி பீடி

# 786

# கல்கி பீடிகள்

## இன்றே பாவித்துப் பயனடையுங்கள்.

திறம் பீடிப்புகையிலை, பீடியிலை, மொத்தமாகவும்
சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

## சி. சின்னத்துரை அன் பிறதர்,

39, K. K. S. வீதி
யாழ்ப்பாணம்

44, 3ம் குறுக்குத் தெரு,
கொழும்பு

தொழிற்சாலை:

118-12, ஆட்டுப்பட்டித் தெரு, கொழும்பு.

## கார் சொந்தக்காரர்களே!

நீங்கள் உபயோகிக்கும் ப. நோ. சே. கலந்த ஒவ்வொரு கலன் **லங்கா பெற்ரேல்.**

- உங்கள் கார் என்ஜினைச் செம்மையாக வைத்திருக்கிறது.
- உங்கள் கார்ப்பிரயாணத்தை உல்லாசமானதாக ஆக்குகின்றது.
- உங்கள் பணத்தை உங்கள் நாட்டிலேயே தங்கிநிற்கச்செய்கின்றது.

உங்கள் நன்மைக்கும்

உங்கள் நாட்டின் நன்மைக்கும்

# ப. நோ. சே. கலந்த

# லங்கா சூப்பர்

# லங்கா பெற்ரேல்

ஆகியவற்றையே உபயோகியுங்கள்.

# இலங்கை
# பெற்ரேலியம் கூட்டுத்தாபனம்

*113*, காலிரோடு, **கொழும்பு-3**

சுத்தமாக

சுகாதார முறைப்படி

நவீன இயந்திரங்களினால்

**விலையுயர்ந்த மூலப்பொருட்களைக் கொண்டு**

தயாரிக்கும்

# பேபி மார்க்

BABY BRAND

# ஸ்பெஷல்

## பானங்களையே அருந்துங்கள்

எல்லா இடங்களிலும் கிடைக்கும்.

தயாரிப்பாளர்

**சுப்பிரமணியன் சோடாக் கம்பெனி**

போன்: 97 வல்வெட்டித்துறை தந்தி: SODA

கிளை:

## ஸ்ரீஜூ ஸ்ரோர்ஸ்

போன்: 373

2/B, ஸ்ரான்லி றோட்,

**யாழ்ப்பாணம்**

தந்தி ESVES

# இலங்கா நிதி லிமிற்றெட்

## 10 ஆண்டு நிரந்தர சேமிப்பு மூலம்

ரூ 500-00, 10 ஆண்டில் ரூ. 1000-00 ஆகும்
ரூ. 1000-00, 10 ,, ரூ. 2000-00 ,,

## ஷை நிரந்தர சேமிப்பு ஒருமாத அறிவித்தலின் பின் கீழ்க்கண்ட தொகையை எடுக்கலாம்

| சேமிப்பு | ரூ. 500-00 க்கு | ரூ. 1000-00 க்கு |
|---|---|---|
| 1 ஆண்டின் பின் | 535-00 | 1070-00 |
| 2 ,, | 572-00 | 1144-00 |
| 3 ,, | 611-00 | 1222-00 |
| 4 ,, | 652-00 | 1304-00 |
| 5 ,, | 695-00 | 1390-00 |
| 6 ,, | 745-00 | 1490-00 |
| 7 ,, | 800-00 | 1600-00 |
| 8 ,, | 860-00 | 1720-00 |
| 9 ,, | 925-00 | 1850-00 |
| 10 ,, | 1000-00 | 2000-00 |

தலைமை ஆபிஸ்: திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
கிளை: வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

# படிமுறை அட்சர கணிதம்

108 நாள்களுக்குரிய பாடவிதானமும் பயிற்சிகளும், விடைகளும் கூடியது.

பாடநூற் பிரசுரசபையின் அங்கீகாரம் 1967 டிசம்பர் வரை பெற்றது.

ஆக்கியோன்.

## A. J. ஆசீர்வாதம் B. Sc, (Lond)

[ஆசிரியர் சம்பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம்]

| | |
|---|---|
| 6 ஆம் வகுப்புப் படிமுறை அட்சர கணிதம் | - 1-60 |
| 7 " " " " " | - 1-60 |

உங்கள் பிரதிகளுக்கு:-

## ஆசீர்வாதம்

### அச்சகம் சக புத்தகசாலை

32, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

(தொலைபேசி:- 274)

நினைவுமலர்கள் வெளியிடுவோரே!

பாடசாலை அதிபர்களே!

புத்தக ஆசிரியர்களே!

பத்திரிகை நிர்வாகிகளே!

குறைந்த செலவில்

சிறந்த 'புளக்'குகள்

செய்யவேண்டுமானல்

எங்களுக்கு எழுதுங்கள்.

## Sri Lanka Block Makers

131, MESSENGER STREET, COLOMBO.










# கலைச்செல்வி

"தேமதுரத்தமிழோசை உலகமெலாம்
பரவும்வகை செய்தல் வேண்டும்"
—பாரதியார்

கலை:5 | 1963 புரட்டாதி—ஐப்பசி | காட்சி : 7

SEPTEMBER — OCTOBER 1963

1. கானமயிலாட......!
2. முத்தமிழ் விழா
3. அன்பார்ந்த நேயர்களே!
4. இலக்கிய விழாவில்...
5. திருக்குறள் கீர்த்தனை
6. இரட்டையர்கள்
7. உப்பும் இரத்த அழுத்தமும்
8. சமத்துவம்
9. தென்னிந்தியாவும்.........
10. எழுத்தாளன்
11. நினைவும் நடப்பும்
12. முறுவலும் பஞ்சமாச்சோ?
13. எழுதச் செல்லும் விதியின்கை.
14. சிந்தனைக் கண்ணீர்
15. பலதும் பத்தும்
16. பட் பட்

"கலைச்செல்வி"யில் வெளியாகும் கதைகளில் வரும் பெயர்களும் சம்பவங்களும் கற்பனையே. கட்டுரை, கவிதைகளில் தெரிவிக்கப்படும் கருத்துகட்கும் 'கலைச்செல்வி' ஆசிரியர் குழுவிற்கும் எவ்வித தொடர்புமில்லை.

நினைவில் வைத்துக்கொள்ளுங்கள்!

மிகச் சிறந்த
படங்களுக்கு...?

# பிறின்ஸ்

சுன்னுகம்.

# மாலாஸ்

காங்கேசன்துறை.

# கானமயிலாட......!

“எழுதுகோல் தெய்வம். என் எழுத்தும் தெய்வம்” என்று பாடினார் மனிதாபிமானக் கவிஞரான மஹாகவி பாரதியார்.

மக்கள் தொண்டே மஹேஸ்வரன் தொண்டு. மக்களின் நல்வாழ்விற்காக எழுதுவது ஓர் அரிய பணி; ஒரு புனிதப் பணி; தெய்வத் திருப்பணி.

உள்ளத்தில் ஒளியுடையவர்களாற்றான் உலகிற்கு வழிகாட்ட முடியும். தூய்மையான சிந்தனையுடையவர்கள், மக்களைத் தூய வழியிலே அழைத்துச் சென்று அவர்களை மேனிலையடையச் செய்வார்கள்.

இத்தகையோர்தாம் உண்மையான எழுத்தாளர்கள்; இலக்கிய கர்த்தாக்கள்.

இவர்களின் எழுதுகோல், வாள் முனையைவிட அதிக சக்திவாய்ந்தது. இவர்களை மக்கள் மதிக்கின்றார்கள். இவர்கள் புகழைத்தேடி ஓடுபவர்களல்ல; புகழ் இவர்களைத் தேடி வருகின்றது.

நாட்டு மக்களிடையே எழுத்தாளர்களுக்கிருக்கும் புகழையும் பெருமதிப்பையும் கண்டு, தாமும் அத்தகைய மதிப்பிற்கு ஆளாக வேண்டும் என்ற ஆசையில், எழுத்தாளராகத் தம்மைக் கூறிக் கொள்கின்றனர் சிலர். இவர்கள், எழுத்தை, பணமும் புகழும் சம்பாதிக்கும் ஒரு சாதனமாகக் கருதுகின்றார்களே தவிர, மக்களை நல்வழிப் படுத்தும் புனிதப் பணியாகக் கருதுவதில்லை.

கற்றோர் மத்தியில், எழுத்தாளன் எனச் சொல்லிக் கொள்பவன் காட்டுமிராண்டித்தனமாக நடந்தால், அவனுடைய எழுத்து, மக்களைத் திருத்தும் என்று எதிர்பார்க்க முடியுமா?

மயிலின் அழகிய ஆட்டத்தைக் கண்டு வான்கோழியும் ஆடுகின்றது. மயிலுக்கும் வான்கோழிக்கும் வேறுபாடு தெரியாமல் சங்கடப் பட்டார்கள் சில அன்பர்கள்.

சென்ற வாரம் நடைபெற்ற சாகித்திய விழாவில் வீசப்பட்ட முட்டைகள், யார் மயில், யார் வான்கோழி என்பதைத் தெளிவாகக் காட்டிவிட்டன.

# மட்டக்களப்பு முத்தமிழ் விழா

இலங்கைத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் அனுசரணையுடன் கிழக்கிலங்கைத் தமிழ் எழுத்தாளர் சங்கம் சென்ற ஆவணி மாதக் கடைசியில் மட்டுநகரில் ஓர் முத்தமிழ் விழாவைச் சிறப்பாக நடாத்தியது. ஈழத்தின் பல்வேறு பகுதிகளிலுமுள்ள பெரும்பாலான கலை, இலக்கிய மன்றங்கள் தம் ஒத்துழைப்பை நல்கின. நாவலர் அரங்கம், விபுலானந்த அரங்கம், பூபாலபிள்ளை அரங்கம் ஆடக சவுந்தரி அரங்கம், சோமசுந்தரப் புலவர் அரங்கம். சித்திலெப்பை அரங்கம், இலங்கையர்கோன் அரங்கம், கணபதிஐயர் அரங்கம் முதலிய அரங்குகளில் கருத்துரைகளும், உரைக் கோவைகளும் கவிதை, இசை, நாடக நடன நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. யாழ்ப்பாணம், திருகோணமலை, மூதூர், கிண்ணியா, கொழும்பு. மலைநாடு முதலிய இடங்களிலிருந்து எழுத்தாளர்களும் கலைஞர்களும் பொதுமக்களும் மட்டுநகரில் ஒன்றுகூடி ஒருவரையொருவர் அறிவதற்கும், கருத்துப்பரிவர்த்தனை செய்வதற்கும் இம் மகாநாடு வாய்ப்பளித்தது. எழுத்தாளர்கள் நடாத்திய இவ் விழாவிற்குப் பொதுமக்கள் பல்லாயிரக்கணக்கில் மிகவும் உற்சாகத்துடன் கலந்து கொண்டது, தமிழ் கூறும் நல்லுலகின் வேறெந்தப் பகுதியிலும் நடைபெருத, நடைபெறமுடியாத ஒரு புதுமையாகும்.

"எழுத்தாளர்கள் என்றுமே கற்பனையுலகில் சஞ்சரிப்பவர்கள்; அவர்களால் உருப்படியான எதையும் செய்ய முடியாது" என்ற தப்பபிப்பிராயத்தைப் போக்கி, செயற்கரிய செயல்களைச் செய்யும் திறன் எழுத்தாளர்களிடம் உண்டு என்பதை நிரூபித்துப் பொதுமக்கள் மத்தியிலே எழுத்தாளர்களின் கௌரவத்தை உயர்த்தி வைத்த இ.த.எ. சங்கத்தையும், கி.இ த.எ. சங்கத்தையும், சிறப்பாகத் திரு.எஸ். பொன்னுத்துரை அவர்களையும் உளமாரப் பாராட்டுகின்றோம்.

---

## பாராட்டுகின்றோம்!

இவ்வாண்டு சாகித்திய மண்டலம் ஆறு தமிழ் எழுத்தாளர்கட்குப் பரிசளித்திருப்பதையிட்டுப் பெருமகிழ்ச்சியடைகின்றோம். "வடமொழி இலக்கிய வரலாறு" என்னும் நூலை எழுதிய கலாநிதி கைலாஸநாதக் குருக்கள், "பகவத் கீதை வெண்பா"வை இயற்றிய புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை, "மட்டக்களப்பு மான்மியத்தைத் தொகுத்து வெளியிட்ட வித்துவான் எவ். எக்ஸ். சி. நடராசா, "தோணி" என்ற சிறுகதைத் தொகுதியை ஆக்கிய வ. அ. இராசரத்தினம், "ஈழத்து இலக்கியப் புலவர்கள்" என்ற நூலை எழுதிய ஏ. ஆர். எம். சலீம், "வாழ்வு பெற்ற வல்லி" நாடகத்தை உருவாக்கிய த. சண்முகசுந்தரம் ஆகியோரே இவ்வாண்டு பரிசுபெற்ற எழுத்தாளராவர். அனைவரையும் மனமாரப் பாராட்டுகின்றோம். மேலும் பல நல்ல இலக்கிய நூல்கள் ஈழத்தில் தோன்றுவதற்கு, இப்பரிசுகள் ஊக்கமும் உற்சாகமும் அளிக்கும் என நம்புகின்றோம்.

# அன்பார்ந்த நேயர்களே!

வணக்கம். "யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற இலக்கிய விழாவில் சில எழுத்தாளர்கள் தகாத முறையில் நடந்து கொண்டார்களாம். எல்லா விபரங்களையும் சரியாக அறிந்து கொள்வதற்குக் "கலைச்செல்வி"யை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றோம்." என்ற ரீதியில் கொழும்பிலும் மட்டக்களப்பிலுமுள்ள இலக்கிய நேயர்கள் எமக்கு எழுதியுள்ளார்கள். உண்மைக்கும் நேர்மைக்கும் "கலைச்செல்வி"மதிப்புக் கொடுப்பதை நேயர்களும் உணர்ந்துள்ளார்கள், என்பதை அறியும்போது நமக்கு அளவிலா மகிழ்ச்சி ஏற்படுகின்றது. விழாவில் நடைபெற்ற நிகழ்ச்சிகளை நண்பர் "யாழ்ப்பாடி" எழுதியிருக்கின்றார். சில எழுத்தாளர்களின் பெயரைக் குறிப்பிட்டு, அவர்கள் அன்று நடந்துகொண்ட முறைகளைப் பற்றியும் ஆதாரபூர்வமாக எழுதியனுப்பிய பகுதிகளை நாமே நீக்கியிருக்கிறோம். தவிர்க்கமுடியாத சிலரின் பெயர்களைத்தான் கட்டுரையில் அனுமதித்திருக்கிறோம். உண்மையான நிலையை வாசகர்கள் அறிவார்கள் என நம்புகின்றோம்.

ஈழத்தின் பிரபல எழுத்தாளராகிய "இலங்கையர்கோன்" அவர்களின் நினைவைக் கொண்டாடுவதற்கு இலங்கையர்கோன் நினைவு விழாச்சபையினர்ஏற்பாடுகள் செய்து வருகின்றனர். பிரபல தென்னிந்திய எழுத்தாளர் "மணிவண்ணன்"அவர்களும் ஈழத்து எழுத்தாளர்கள் அனைவரும் விழாவில் கலந்துகொள்கிறார்கள். விழா வெற்றிகரமாக நடப்பதற்கு இலக்கிய அன்பர்கள் உதவி புரிவார்கள் என நம்புகின்றோம்.

"சிந்தனைக் கண்ணீர்" குறுநாவல் இந்த இதழுடன் நிறைவு பெறுகிறது. திடீரென்று உணர்ச்சி வசப்படும் கண்ணனால் இன்பமாக வாழ முடியவில்லை. யதார்த்த உலகின் போக்கை நன்குணர்ந்த ராதா, தன் சிந்தனைக்கு வேலை கொடுத்து,கடைசியில் தன் காதலனைத் துறக்கிறாள்; ஆனால் காதலைத் துறக்கவில்லை. தனது தூய்மையான அன்பினால் கண்ணனையும் மனிதனாக வாழச் செய்வதில் வெற்றியடைகிறாள் ராதா. இக் குறுநாவலைப் பற்றிய கருத்துக்களை வாசகர்களிடமிருந்து எதிர்பார்க்கின்றோம்.

இவ்விதழில் இரண்டு சிறுகதைகளும் மற்றைய வழக்கமான அம்சங்களும் இடம்பெறுகின்றன.

கதைகளின் தொகையை அதிகரிக்கும்படி சில அன்பர்கள் எழுதியிருக்கின்றார்கள். அடுத்த இதழிலிருந்து அவர்களின் கோரிக்கையை நிறைவேற்ற முயல்வோம். இவ் விஷயத்தில் எழுத்தாளர்களின் ஒத்துழைப்பும் அவசியம். சுவையான சிறந்த சிறுகதைகளை அவர்கள் எழுதியனுப்பவேண்டும்.

இலக்கிய உலகில் ஒரு தனிப்போக்கில் செல்லும் எழுத்தாள நண்பர் ஒருவர் தன்முதல் நாவலை விரைவில் வெளியிடவிருக்கின்றார். அந் நாவலை வாசகர்கட்கு அறிமுகம் செய்யும் நோக்கத்துடன் அதிலுள்ள ஓரத்தியாயத்தை அடுத்த இதழில் வெளியிடுகின்றோம்.

—ஆசிரியர்

# இலக்கிய விழாவில்......

## - யாழ்ப்பாடி -

அரசாங்கத்தின் ஆதரவில் இயங்கிவரும் ஸ்ரீலங்கா சாகித்திய மண்டலம் சென்ற 5ம் 6ம் திகதிகளில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக் குமாரசாமி மண்டபத்தில் ஒரு தமிழிலக்கிய விழாவை நடாத்தியது. இவ் விழாவில் நடைபெற்ற சில வேண்டத்தகாத நிகழ்ச்சிகள் பொது மக்களின் மனத்திலே வெறுப்பையும் பரபரப்பையும் ஏற்படுத்திவிட்டன. விழாவைத் தொடர்ந்து சில எழுத்தாளர் சங்கங்களும் அவற்றின் கிளைகளும், தனிப்பட்டவர்களும் பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கைகளும் பெரும் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளன. உண்மை எது, பொய் எது, திரிப்பு எது என்று இனங்கண்டு கொள்ள முடியாமல் திண்டாடுகிறுர்கள் மக்கள். "யாழ்ப்பாணத்து எழுத்தாளர்கள் இவ்வளவு தரக்குறைவாக நடந்துவிட்டார்களே!" என்று ஈழத்தின் பிற பகுதியிலுள்ள பலர் வருந்துகின்றுர்கள். ஒரு யாழ்ப்பாணத்து எழுத்தாளன் என்ற முறையிலும், இலக்கிய விழாவில் நேரடியாகக் கலந்து கொண்டவன் என்ற முறையிலும் அன்று நடைபெற்ற நிகழ்ச்சியை உள்ளது உள்ளபடிகூறி அது சம்பந்தமாகச சிலர் நடந்து கொண்ட முறையையும் ஆராய்வது என் கடமை என்று கருதுகின்றேன். "உண்மை புனிதமானது; அழிவற்றது" என்பதற்கமைய,. நடந்தவற்றை எழுதுகின்றேன்.

இசைப்புலவர் செல்லத்துரை அவர்களின் தமிழ்த்தாய் வாழ்த்துடன் விழா ஆரம்பமானது. விழாச் செயலாளரான கலாநிதி ஆ. சதாசிவம், "பல்வேறு கருத்துக்களையும் கொண்டவர்கள் ஒன்று கூடித் தம் கருத்தைப் பரிமாறும் வண்ணம் ஏற்படுத்தப்பட்ட" அவ் விழாவிற்கு வருகை தந்த அனைவரையும் வரவேற்றுப் பேசினுர். வட மாநிலஉதவி வித்தியாபதி திரு. சி. உ. சோமசேகரம் விழாவைத் தொடக்கி வைக்க, மேற்சபை உறுப்பினர் திரு. சு. நடேசன் தலைமையுரை நிகழ்த்தினுர்- இவ்வாண்டு சாகித்திய மண்டலப் பரிசு பெற்ற ஆறுபேரையும் பாராட்டும நிகழ்ச்சி தொடங்கவிருந்தபோது, சபையிலிருந்ததிரு. பிரேம்ஜி எழுந்து தலைவரை நோக்கி ஏதோ கூறினுர். அதிகம் பேசுவதானுல் மேடைக்கு வரும்படி தலைவர் அவரை அழைத்தார். 'நிகழ்ச்சி நிரலில் இல்லாத நிகழ்ச்சியைத் தலைவர் அனுமதிக்கக் கூடாது" என்று வித்துவான் க. ந. வேலன் எழுந்து தலைவரிடம் கூறினுர். இந்த நேரத்தில் திரு. பிரேம்ஜியின் ஆதரவாளர்கள் கூச்சலிட்டனர். ஓர் எழுத்தாளர் கதிரையைத் தூக்கி வித்துவான்மேல் எறிவதற்கு முயன்ருர். குழப்பம் ஏற்பட்டது.

இந்த நிலையிலும் "எங்கள் முற்போக்கு எழுத்தாளர் சங்கம் தன் முடிவைத் தெரியப்படுத்தும்படி என்னைப் பணித்திருக்கிறது. என் கடமையை நான் செய்தே தீருவேன்." என்ற பிடிவாதத்துடன் மேடையில் நின்று பேசினுர் திரு. பிரேம்ஜி. அவரைத் தொடர்ந்து திரு, சமீம் மேடைக்குச் சென்று சாகித்திய

மண்டல உறுப்பினர் கலாநிதி சதாசிவம் தான்தோன்றித்தனமாக நடப்பதாகவும், முஸ்லீம்களைப் புறக்கணித்துவிட்டதாகவும், தன்னை மதிக்கவில்லையென்றும், கூறினர். சமீம் அவர்களைப் பேசவேண்டாம் எனத் தலைவர் தடுத்தார். ஆனல் அவர், முரட்டுப் பிடிவாதத்துடன் தொடர்ந்து பேசினர், கூட்டத்தில் கூச்சல் அதிகரித்தது; முட்டைகள் எறியப்பட்டன; நாற்காலிகள் வீசப்பட்டன. தலைவரால் நிலைமையைச் சமாளிக்க முடியவில்லை. "கூட்டம் முடிந்துவிட்டது" என அறிவித்துவிட்டு மேடையிலிருந்து இறங்கிவிட்டார்; சிலமணி இடைவேளையின் பின் விழா மீண்டும் தொடர்ந்து நடைபெற்றது. 5ம் திகதி மாலையும், 6ம் திகதியும் விழா சிறப்பாக நடைபெற்று முடிந்தது.

விழாவைக் குழப்பியவர்கள் யாழ்ப்பாணத்து எழுத்தாளர்கள் என்று கூறுவது தவறு. கொழும்பிலிருந்து வந்த சில எழுத்தாளர்களும் பேராதனையிலிருந்து வந்த ஒருவரும் யாழ்ப்பாணத்து எழுத்தாளர் ஓரிருவருமே குழப்பத்திற்குக், காரணமாக இருந்தவர்கள். இவர்கள் அனைவரும் முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தைச் சேர்ந்தவர்களே. மு. போ, எ. சங்கம், சங்கரீதியாக இக் குழப்பத்தை ஏற்படுத்தியது என்றுகூற நான் விரும்பவில்லை. ஆனல் குழப்பத்தை ஏற்படுத்தியவர்கள் துரதிர்ஷ்டவசமாகவோ, அதிர்ஷ்டவசமாகவோ இச் சங்கத்தைச் சேர்ந்தவர்களாயிருந்து விட்டார்கள். இவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டியது இ. மு. எ. சங்கத்தின் கடமையாகும்.

வித்துவான் வேலன் ஓர் ஒழுங்குப் பிரச்சனையையே கிளப்பினர். அவரைப் பேசவேண்டாம் என்று கூச்சலிட்டு அடக்கமுயன்றதும், கதிரையைத் தூக்கிக் கொண்டு சென்றதும் வேண்டாத செயல்கள்.

தான் பேசுவதற்குச் சென்றதே, குழப்பத்தின் அடிப்படைக் காரணம் என்பதை திரு. பிரேம்ஜியால் ஏன் உணரமுடியவில்லை? கூட்டத்தில் ஏற்பட்ட சலசலப்பைக் கண்டதும் அவர் திரும்பி வந்திருக்கலாம்; அல்லது சங்கத்தின் முடிவின்படி, பாராட்டு நிகழ்ச்சியைப் பகிஷ்கரித்து வெளிநடப்புச் செய்திருக்கலாம். "சாகித்திய விழாவில் நடத்தப்பெறவிருக்கும் 'பரிசு பெற்றோரைக் கௌரவித்தல்' எனும் நிகழ்ச்சியிற் கலந்துகொள்ள மாட்டோம் என்றும் தெரிவித்தோம். இது பற்றி நாம் வெளியிட்ட அறிக்கைகள் பத்திரிகைகளிற் பிரசுரமாயின" — என இ. மு. எ. சங்கம் 13-10-63ல் பத்திரிகைகட்கு அறிக்கை வெளியிட்டது. இதைப்பற்றி வாசகர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும். இ. மு. எ. சங்கத்தினர்க்கு யார் அழைப்பு அனுப்பினர்களோ, அவர்கட்குத் தம் முடிவை அறிவித்துவிட்டார்கள் சங்கத்தினர். பொதுமக்களுக்கும் தம் முடிவை அறிவிப்பதற்காகப் பத்திரிகைகளில் அறிக்கை வெளியிட்டார்கள். இத்தனைக்கும் பிறகு, என்ன காரணத்திற்காக விழாவில் தமது முடிவைக்கூற முன்வர வேண்டும்? பாராட்டு நிகழ்ச்சி நடைபெறுவதன் முன், சங்கத்தினர் எழுந்து மௌனமாக வெளிநடப்புச் செய்திருக்கலாமே! அவர்களை எவருமே தடுத்துமிருக்கமாட்டார்கள்; தவருகக் கருதியிமிருக்கமாட்டார்கள்.

திரு. பிரேம்ஜி பேசியது தவறு தான்; மன்னித்துக் கொள்வோம். ஆனல் மேடையில் நின்ற அவர் குழப்பம் விளைத்துக் கூச்சலிட்ட தனது நண்பர்களை ஏன் அடக்க வில்லை, ஏன் கண்டிக்கவில்லை? ஏன் அமைதியாக இருக்கச் செய்ய முடிய வில்லை? ''எல்லோரும் சேர்ந்து கத்து வோம்; கூட்டம் குழம்பினல் போ தும்" என்ற மனப்பான்மையினல் தான் அப்படிப் பேசினரா?

திரு. சமீம் அவர்கள் தானகவே மேடைக்குச் சென்ருர்; தலைவரின் அனுமதியின்றிப் பேசினர். விழாச் செயலாளர் சதாசிவம் தன்னை மதிக் கவில்லை என்றுமுதலிற் குற்றஞ் சாட் டினர், இது எவ்வளவு தூரம் பொய் யானது என்பதை விழாவிற்கு வந் திருந்த அனைவரும் அறிவார்கள். வரவேற்புரை நிகழ்த்திய விழாச் செயலாளர், தன் வரவேற்புரையின் போது, திரு. சமீம் அவர்களின் பெய ரையும் குறிப்பிட்டு அவரை வரவேற் ருர். ஒலிப்பதிவு செய்யப்பட்ட இவ் வரவேற்புரை இலங்கை வானெலி யில் ஒலிபரப்பப்பட்டது. சாகித்திய மண்டலத் தமிழ் அங்கத்தவர்கள் முஸ்லிம்களைப் புறக்கணிக்கின்ருர் கள் என்பது திரு. சமீமின் இரண் டாவது குற்றச் சாட்டு, இதற்குமுன்பு சாகித்தியமண்டலத்தினல் இரண்டு தடவைகள் பரிசு வழங்கப்பட்டன. ஆனல் எந்த ஒரு முஸ்லிமிற்கோ பரிசு கிடைக்கவில்லை. இந்த ஆண்டு தான் முதன் முதலாக ஒரு முஸ்லி மிற்குப் பரிசு வழங்கப்பட்டது, இதைத் திரு. சமீம் மறுப்பாரா?

திரு. சலீம் அவர்கட்குப் பரிசு வழங்கப்பட்டதைத் திரு, சமீம் வர வேற்கிருர். ஆதரிக்கிருர். அல்லா விடில், திரு. சலீம் அவர்கட்கு வே ருெர் இடத்தில் நடைபெற்ற பா ராட்டு விழாவிற்குத் திரு. சமீம் தலைமைதாங்கியிருப்பாரா? விழாவில் பேசுவதற்காகச் சாகித்திய மண்ட லத்தின் அங்கத்தவரான திரு. முகம் மது உவைஸ் அவர்களும் கருத்தரங் கிற்கு திரு. எம். ஏ. ரகுமான் அவர் களும் திரு. எம். ஏ. சுக்ரி அவர்களும் கவியரங்கத்திற்கு எம் எஸ்· எம் சாலி ஹ் (அண்ணல்) அவர்களும் அழைக் கப் பட்டிருந்தார்கள். உண்மை இப் படியிருக்கையில், முஸ்லிம் மக்கள் புறக்கணிக்கப்பட்டார்கள் என று திரு. சமீம்கூறுவது வேடிக்கையாகவி ல்லையா? கூட்டத்தில் தமிழர்— முஸ்லிம்கள் பிரச்சனையைத் திரு. சமீம் ஏன் கிளப்பினர் என்பதுதான் எனக்குத் தெரியவில்லை.

முற்போக்கு எழுத்தாளர்கள் விழாவை எப்படியாவது குழப்பிவிட வேண்டும் என்ற முன்னேற்பாடு டனேயே வந்தார்கள், அல்லாவிடில் அவர்கள் முட்டைகளைக் கொண்டுவர வேண்டியதன் அவசியம் என்ன? கூட்டத்தைக் குழப்பிவிட்டோ மென்ற வெற்றித் திருப்தியுடன் அவர்கள் விழா மண்டபத்தைவிட்டு வெளியேறும் போது, மணடப வாச லில் சீனவெடிகள் கொழுத்தினர்கள், இந்த வெடிகளை அவர்கள் கொண்டு வரவேண்டியதன் அவசியமென்ன?

இவ்வாண்டு சாகித்திய மண் டலப் பரிசைப் பெற்ற திரு. சலீம் நடந்துகொண்ட முறை, எவருக்கு மே புரியாத ஒரு புதிராக இருக்கின் றது. சாகித்திய மண்டலத்தின் போக்கு அவருக்குப் பிடிக்காதிருந் தால், அவர் பரிசை வாங்காது மறுத் திருக்க வேண்டும். சிங்கள இலக்கி கியப் பிரிவில் டாக்டர் குணதாசா அமரசேகரா என்னும் எழுத்தாளர், தமக்களிக்கப்பட்ட பரிசை வாங்காது மறுத்துவிட்டார் என்பதை இங்கு நான் நினைவூட்டுகின்றேன், ஆனல் திரு சலீம் பரிசைப் பெற்றுக் கொண் டார். பரிசைப்பெற்ற இந்த முஸ்லிம் எழுத்தாளரே சாகித்திய மண்டலம் முஸ்லிம் மக்களை புறக்கணிக்கிறது என்று கூச்சலிட்டவர்களைப் பின் தொடர்ந்து ஏன் சென்ருர் என்பது மர்மமாகவே இருக்கிறது,


சாகித்திய மண்டலப் பரிசுகள் சம்பந்தமாக ஊழல்கள் ஏதாவது நடைபெற்றனவா என்பது இரண்டொருவர் கூடித் தீர்மானிக்கும் விஷயமல்ல. பரிசு விஷயத்தில் அதிருப்தி ஏற்பட்டால் மனிதத் தன்மைக்கு உட்பட்ட வழிகளில் வேண்டிய நடவடிக்கைகளை எடுத்திருக்கலாமே! அவற்றைவிட்டு விட்டு, முட்டைகள் எறிந்தும் கதிரைகளை வீசியும் கூட்டத்தைக் குழப்புவதற்கு முற்போக்கு எழுத்தாளர்கள் முன் வந்துவிட்டார்களே!

சாகித்திய மண்டலத்தின் நடவடிக்கைகளைப் பற்றி விசாரணை செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை நான் ஆதரிக்கின்றேன். விசாரணை பாரபட்சமற்றதாக இருக்கவேண்டும். ஊழல்கள் நடைபெற்றிருந்தால் அவை அம்பலமாக்கப்படவேண்டும். ஊழல்கள் நடைபெறவில்லை என்றால், மக்களின் மனத்தில் சாகித்திய மண்டல அங்கத்தவர்கள் பற்றி எழுந்த தப்பபிப்பிராயங்கள் நீங்கும். விசாரணை பற்றி இன்னுமொன்று குறிப்பிட விரும்புகின்றேன். முன்பும் இரண்டு தடவைகள் பரிசுகள் வழங்கப்பட்டன அல்லவா? அவை சம்பந்தமாகவும் சில கருத்து வேறுபாடுகள் முன்பு இருந்தன. ஆகவே அவற்றை பற்றியும் பூரணமாக விசாரணை நடத்தப்பட வேண்டும்.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற இலக்கிய விழாவில் சில எழுத்தாளர்கள் கீழ்த்தரமாக நடந்து கொண்டதால், யாழ்ப்பாணத்திற்கே இழுக்கு ஏற்பட்டுள்ளது. எழுத்தாளன் என்றால் எள்ளி நகையாடும் நிலையும் உருவாகியுள்ளது; ஆகவே விழாவில் நடைபெற்ற நிகழ்ச்சிகளைப் பூரணமாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கு, முன்வரும்படி யாழ்ப்பாணத்துத் தமிழறிஞர்களையும் பெரியோர்களையும் அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

## நூல் வெளியீட்டு விழா

இலங்கைப் பல்கலைக் கழக விரிவுரையாளர், கலாநிதி கா. கைலாஸநாதக் குருக்கள் M. A., Ph. D., எழுதிய "சைவத்திருக் கோவிற் கிரியை நெறி" என்னும் நூலின் வெளியீட்டு விழா சமீபத்தில் சிலாபம் ஸ்ரீமுன்னேஸ்வரம் தேவஸ்தானத்தில் சிறப்பாக நடைபெற்றது. விவசாய அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு. ம. ஸ்ரீகாந்தா அவர்கள், நூலாசிரியரிடமிருந்து முதலாவது பிரதியை வாங்கி விற்பனையை ஆரம்பித்து வைத்தார்.






—பாமா ராஜகோபால்

o பெரிய மனிதராக வேண்டும் - பெரிய பதவி வகிக்கவேண்டும் - என்று ஆசை இருக்கிறதா? சிறிதளவு நேரம் மட்டும் தூங்கப் பழகிக்கொள்ளுங்கள். நெப்போலியன், சர்ச்சில், நேரு மற்றும் உலகத்தலைவர்களின் தூக்கநேரம் மிகவும் குறைவு!

o என்ன-உங்களுக்குக் கேட்கும் சக்தி குறைந்துவிட்டதா?ம்- அதற்காக கவலைப்படுகிறீர்களா? ஏன் ஸார், உங்களுக்கு தாமஸ் ஆல்வா எடிஸனைத் தெரியாதா? அவருக்கும் காது கேட்காது. அறுவைச் சிகிச்சைகள் செய்து குணப்படுத்த வேண்டுமென்று மருத்துவ நிபுணர்கள் தீர்மானித்து நாளும் குறித்தார்கள். குறித்த நாள் வந்ததும் மறுத்துவிட்டார் எடிஸன் காது கேட்காது இருப்பதால்; தான் இரைச்சல்களையும் - சிலரது உளறல்களையும் தவிர்த்து வேலையைக் கவனமாகச் செய்யமுடிகிறது' என்றார் அவர். இப்போது மகிழ்ச்சிதானே?

o 'தயவு செய்து நான் சொல்வதைக் கேட்டுக் கோபம் கொள்ளக் கூடாது' என்ற பீடிகையோடு யாராவது பேச ஆரம்பித்தால்- அவர்கள் சொல்வது கட்டாயமாகக் கோபத்தைக் கிளறக்கூடியதாகத் தான் இருக்கும்.

o லாரென்ஸ் லேங்கர் என்னும் பிரபல பாடகருக்கு ஞாபக மறதி அதிகம். ஒரு நாள் அவர் தியேட்டரிலிருந்து அவசரமவசரமாக வெளியே ஓடிவந்து வெளியில் நின்று 'டாக்சி' ஒன்றில் ஏறிக் கொண்டார். ''நான் ரயிலைப் பிடிக்க இன்னும் இருபது நிமிடங்கள் தான் இருக்கின்றன. வேகமாக 'ஸ்டேச'னுக்குப் போ!— என்று சொல்லிவிட்டு அவர் பத்திரிகையை விரித்துப் படிக்கத் தொடங்கினார். பதினைந்து நிமிடங்களும் - பத்திரிகையில் பத்து நிமிடங்களும் சென்ற பிறகு அவர் நிமிர்ந்து பார்த்தார். 'டாக்சி' தியேட்டர் வாசலில் அசையாது நின்று கொண்டிருந்தது. பிறகுதான் அவர் தெரிந்து கொண்டார் - அந்த 'டாக்சி'யில் 'டிரைவர்' இல்லை என்று!

o அன்பு நிறைந்த தாயைப் பெற்றவர்களுக்கு அதிர்ஷ்டம் வேறில்லை; அதை உணர்ந்த குழந்தைகளைப் பெற்றவளுக்கு செல்வம் வேறில்லை; உலகத்தின் துன்பம் அங்கே தூசிக்குச் சமானம்.

—அகிலன்,

சிறுவர் தொடர்கதை:




7

## உயிரா மயிரா?

எண்ணத்திலே மண்ணைப் போடுவதுபோல அவன் கண்ணெதிரிலே காட்டுமிராண்டிகள் ஆறுபேர் அவனை வழிமறித்துக்கொண்டார்கள். நினைவு அனைத்தையும் சிங்க நாட்டு அரசபீடத்தைத் தன் காலடியிலே நசுக்கிப் பொசுக்குவதிலேயே கங்கணம் கட்டிக்கொண்டிருந்த அவன்—இல்லாதவைகளையும் பொல்லாதவைகளையும் சொல்லிச் சூழ்ச்சிகள் செய்து பழக்கப்பட்ட மார்த்தாண்டன்—

என்ன செய்வதென்றறியாது விழித்தான்; திகைத்தான்! ஈட்டியைக் கையிலே ஆயுதமாக வைத்திருந்த அக் காட்டுமிராண்டிகளில் இருவர்—சற்றே எட்டத்தில் நின்ற மார்த்தாண்டனைக் கட்டிப்பிடித்தார்கள்; அவர்கள் பிடியிலிருந்தும் இடியிலிருந்தும் விலகமுடியாத அவன்—அவர்கள் முன் தலைகுனிந்தான்; மண்டியிட்டான்!

மார்த்தாண்டன் கால்கள், கரங்கள் கயிற்றினால் இறுகக் கட்டப்பட்டன. காட்டுமிராண்டிகளின் இடிகளால் சலித்துப்போன அவன்—கட்டப்பட்ட கயிற்றின் வலிதாங்கமுடியாமல் கத்தினான்; குளறினான்; புரண்டான்!

புலிபோல் இருந்த மார்த்தாண்டன் அவர்கள் முன்னே எலியானான்; சிங்கநாடு தன் காலடியிலே புரள வேண்டுமென்று எண்ணிய அவன்

இப்போது—

காட்டுமிராண்டிகளின் காலடிகளிலே தயங்கி- மயங்கி- மருண்டு- சுருண்டு விழுந்தான்.

சிங்கநாட்டின் அரசுக்கே சொந்தமான மகேந்திரனை ஆளவிடாது சதிசெய்து—கணேந்திரனைத் தன் கைப்பொம்மையாக்கி—மக்கள் மதிப்பைப்பெற்று மாசு எதுவுமில்லாது ஆட்சி செலுத்திய இராஜவர்மனுக்கு எல்லையில்லாத் தொல்லையைக் கொடுத்து— பாமரமக்களைப் படுந் துன்பத்துக்குள்ளாக்கிய 'சூழ்ச்சிகளின் பிரதிபிம்பம்' மார்த்தாண்டன்—

எழுந்து நடக்கமுடியாத நிலையில்— காட்டுமிராண்டிகளின் கண்ணெதிரிலே மண்ணில்—தாங்கமுடியாத வெப்பத்தில் குப்புற—வாயிலிருந்து நுரைவடிய நாயிலும் கேவலமாக— விழுந்துகிடந்தான்; சிங்க நாட்டு அரசபீடத்தை அடிமையாக்கி விடவேண்டுமென்று பித்தம்பிடித்த அந்த எத்தன்—மண்ணுக்கு முத்தம் கொடுத்துக் கொண்டிருந்தான். பாவம்; நாடொன்றைச் சர்வாதிகார ஆட்சிசெலுத்த அர்த்தமில்லாத, பல வீழ்ச்சியுறக்கூடிய சூழ்ச்சிகளைச் செய்யச் சதித்திட்டம் உருவாக்கிய அவனுக்கு ஏற்பட்ட பரிதாபகரமான தண்டனை!

குதிரையொன்றை எட்டிப்பிடித்துத் தட்டிக்கொடுத்தான் ஒருவன். பார்ப்பதற்கே பரிதாபகரமாக இருந்த மார்த்தாண்டனை, தமக்கே உரித்தான மிருகத்தனமான முறையில் குதிரைமேல் முதிரை மரத்தைத் தூக்கிப்போடுவதுபோலத் தூக்கிப்போட்டார்கள்; அக்குதிரையில், அவன் உடலைத் தாங்கியபடி அமர்ந்தான் ஒருவன்.

சுற்றிநின்ற குதிரைகளில் மற்றவர்கள் ஏறி உட்கார்ந்து, கடிவாளத்தைப் பற்றிக்கொண்டார்கள். மகிழ்ச்சியால் துள்ளிக் குதித்துக்கொண்டிருந்த அந்த ஆறுபேரும், வெகு வேகமாகக் குதிரையைச் செலுத்தினர்.

ஆறுபாய்வதுபோல— அந்த ஆறுபேரையும், மார்த்தாண்டனையும் சுமந்தபடி, பாய்ந்துகொண்டிருந்தன ஆறு குதிரைகள்.

போகும்போது—

புரியாத பாஷையில்— மற்றவர்களுக்குத் தெரியாத விதத்தில்—விரிவாக எதைப்பற்றியோ கதைத்துக்கொண்டார்கள், அக் காட்டுமிராண்டிகள்!

வெயிலின் அகோரத்தால் களைத்துவிட்ட அவர்கள் இளைத்துப் போய்விட்டார்கள்; 'நெற்றியில் வேர்வை சிந்தி நீங்கள் களைத்து இளைத்தாலும், உங்களுக்கு வெற்றி தேடித் தருவது எங்கள் பொறுப்பு — என்று சொல்லிக் கொள்வது போல-அவர்களைத் தாங்கியிருந்த குதிரைகள் விரைவாக-அதிவிரைவாக - வேகமாகச் சென்றுகொண்டிருந்தன!

இளவரசர்கள் மகேந்திரனும், கணேந்திரனும் பிடித்து வைக்கப்பட்டிருந்த மண்டபத்தைக் குதிரைகள் விரைவாகச் சென்றடைந்தன.

குதிரையிலே வந்திறங்கிய எதிரே நின்ற காட்டுமிராண்டிகளையும், மார்த்தாண்டனையும் கண்டுவிட்ட மண்டு-மேடையிலே காடைபோல் ஆசனமொன்றில் அமர்ந்திருந்த தலைவன்—

"என்னருமை வீரர்களே! கொண்டு வந்துவிட்டீர்கள் போலி

ருக்கிறதே. நீங்களல்லவா வீரர்கள்! நீங்கள் கொண்டு வருவதற்கு முதல் இங்கு வலியவந்து எமது எலிப்பொறியில் சிக்கிக் கொண்டு விட்டார்கள்: களைத்துவிட்டீர்களே— இளைப்பாறுங்கள்!” என்ருன், கோட்டையொன்றைப் பிடித்து விட்டோமே என்கிற மகிழ்ச்சியில்.

அன்றிரவு அவர்கள் கொண்டாடப் போகும் விழாவுக்காகத்தான் இந்த ஏற்பாடு: மனித மாமிசத்தைச் சமைத்து – இரவிரவாகக் குடித்துக் கூத்தாடிக் கும்மாளமடித்து–ஆடிப் பாடி–முடிவில் சுவைப்பார்கள்; விருந்துண்பார்கள்!

இன்னும் ஒருமணி நேரத்தில் அங்கிருக்கும் பல உயிர்கள் மயிர்களென மதியாது மறையப் போகின்றன! முக்கியமாக மூன்று உயிர்கள் இந்த உலகைவிட்டு வேறு உலகத்திலே ஐக்கியமாகப் போகின்றன.

முதலாவது உயிர்—
மகேந்திரன்–இளவரசர்
இரண்டாவது உயிர்—
கணேந்திரன்–இளவரசர்.
மூன்ருவது உயிர்—
மார்த்தாண்டன்- சூழ்ச்சிக்காரன்.

இப்போது—

மார்த்தாண்டன் மயக்கம் தெளிந்திருந்தான்; அவனைச் சுற்றிக் கட்டப்பட்டிருந்த கயிறுகள் அவிழ்க்கப்பட்டன. ஆனாலும்-பாதுகாப்பு!

தூரத்தே காட்டுமிராண்டிகளின் கூண்டிலே அடைபட்டிருந்த இளவரசர்களைக் கண்டுவிட்ட மார்த்தாண்டன்—

மகிழ்ந்தான்; அவர்களுக்கும் தன்னிலை வந்ததே என்று எண்ணித் தன்னைத்தானே தேற்றிக் கொண்டான்.

காலதேவன் ஓடிக் கொண்டிருந்தான்.

தமது பிடியிலே சிக்கிச் சீரழியும் விலைமதிக்கமுடியாத மனிதவர்க்கத்தைக் கொலைஞர்கள்-இரும்பென வளர்த்திட்ட அவர்களைத் துரும்பென மதியாது- தமது கொடுவாளுக்கு ஒரு நாளிலேயே – இல்லை இல்லை- அந்தக் கணத்திலேயே பிணமாக்கி விடுவதற்காக – எழுந்து செல்ல மனமில்லாத அவர்களை இழுத்துச் சென்றுகொண்டிருந்தார்கள்.

மன்னனுய் மணிமகுடம் தரித்து– பாவலரும் நாவலரும் போற்றும் பாவை-வட்ட நிலவு வதனத்தாள்– அன்ன நடையும் மின்னலிடையும் கொண்ட 'அழகின் இலக்கண'மென வேற்று நாட்டரசர்களால் போற்றப் பட்ட மந்திரி மகள் இந்திரா பக்கத்தேயிருக்க – சிங்கநாட்டு சிம்மாசனத்திலே சீரும் சிறப்புடனும் இருக்க வேண்டிய இளவரசர் மகேந்திரன்—

காட்டுமிராண்டிகளின் கைகளிலே புரண்டபடி பளிச்சென வெளிச்சமாக மின்னிக் கொண்டிருக்கும் கூரிய வீரிய வாளுக்கு இரையாகப் போகிருன். சே, நல்லவனுக்கா இக் கதி?...ஐயோ!

நாடு பிடித்து–விலை மதிப்பற்ற மணிமகுடத்தை தலையிலே சூடவேண்டுமென்ற தணியாத ஆசை கொண்ட கணேந்திரனுக்கும்—

சூழ்ச்சியின் பிரதிபிம்பமாக– நல்லவனுகஇருந்த கணேந்திரனுக்கு இல்லாதவற்றைச் சொல்லி – நாட்டைக் கைப்பற்றும் ஆசையை ஊட்டி –சிங்கநாட்டைக் குழப்பத்தில்ஆழ்த்தி

விட்ட மார்த்தாண்டனுக்கும்—

தேவையான — கிடைக்கவேண்டிய—கொடுக்கக் கூடிய பரிசைக் காட்டுமிராண்டிகள் கொடுக்கப் போகிறார்கள்; நெருங்க முடியாத காட்டுமிராண்டிகள் இழுவையிலே நழுவ முடியாத மிருகங்களாக - வாய் பிளந்த வரட்டுப் பேர்வழிகளின் பின்னே வாய் பொத்தியவர்களாக—வல்லரசை ஆட்டி அடக்க எண்ணியவர்கள் செல்லரித்த காசிலும்கேவலமாகச் சென்று கொண்டிருந்தார்கள்.

பரிதாபம்—அன்று போர்முரசு கொட்டியவர்கள் - இன்று பேடிகளாகக் கைகட்டி நிற்கிறார்கள். அன்று சிங்கநாட்டு அரசபீடத்தைக் கைப்பற்றி மன்னனைய் வரச்சதி செய்தவர்கள்—இன்று தங்கள் உயிரையே காப்பாற்ற முடியாத நிலையில் நின்று கொண்டிருந்தார்கள்!

கொலை மண்டபத்திலே அலை புரண்டோடுவது போல - பல்வேறு உணர்ச்சிகளை உள்ளத்திலே நிறுத்தி —உயிரைக் காப்பாற்ற இந்நேரத்திலேயாவது ஏதாவது வழிகள் உண்டா என்று விழிகளைப்பிதுக்கி — வரிசையாக-தமக்கே உரிய மிடுக்கை மறந்து—மூலையில் முடங்கிக் கிடக்கும் முண்டங்களாக — காட்டுமிராண்டிகளுக்குத் தம்மைத், தமது மானத்தை மறந்து தானமாகக் கொடுக்க முன் வந்த-இல்லை-முன் கொண்டு வரப்பட்ட மனிதர்கள், இளவரசர்கள் மார்த்தாண்டன் உள்பட—எல்லாரும் நிறுத்தி வைக்கப்பட்டார்கள்.

மகேந்திரன் மனதிலே பலதரப்பட்ட எண்ணங்கள் மின்னிமறைந்து கொண்டிருந்தன. 'சிங்கநாட்டு அரசபீடத்துக்கு இனியார் சொந்தக்காரன் —ஐயோ! தந்தை என்ன செய்யப் போகிறாரோ—அம்மா துடிக்கப் போகிறாளே!" என்று பலவாறுசிந்தித்தான். முக்கியமாக அவன் உள்ளத்திலே—

அழகி இந்திராதான் இடம் பெற்றாள். ஆம்; அவள்மேல் அவன் உயிரையே வைத்திருந்தான். அவள் தனது இனிமையான குரல்கொண்டு ஒரு பாட்டுப்பாடி விட்டால்—அப்பப்பா அவன் தன்னையே மறந்து விடுவான்; அவள் வீணை வாசித்தால்-சொர்க்கத்துக்கே போய் விடுவான். இப்படி அவள் மேல் அணையாத காதல் கொண்டிருந்த மகேந்திரன்—

அவளுக்காக இரண்டு சொட்டுக் கண்ணீர் விட்டான்!

கணேந்திரனும் ஏதோ சிந்தனையில் ஆழ்ந்திருந்தான். சாகப் போகும் அந்த நேரத்தில் கூடத் தன் அண்ணன் மகேந்திரன்மேல் உள்ள கோபம் தணியவில்லை; அடங்கவில்லை!

ஆனால் மார்த்தாண்டனோ—

இந்தக் கடைசி நேரத்திலேயாவது தப்புவதற்கு வழிகள் உண்டா என்று தன் 'சூழ்ச்சி மூளை'யில் சிந்தித்துக்கொண்டிருந்தான்; அவன் உள்ளத்திலே...

மனிதவர்க்கத்தின் உயிரை மயிரென மதியாது அழிக்கப் போகும் அந்த அகோரக் காட்சியை—பார்க்கச் சகிக்காத வேதனையூட்டக் கூடிய கொலைகளைக் காணவைப்பதற்காக அவ்விடத்தே காட்டுமிராண்டிகளின் தலைவன் கொண்டு வரப்பட்டான்.

பளிச்சென மின்னும் வெளிச்சமான தீட்டிய வாளை காட்டுமிராண்டிகள் இருவர் — ஈவிரக்கமற்ற கொலைகள் பல செய்து பழக்கப்பட்ட மரங்கள் போன்ற தங்கள் கரங்களால் எடுத்தனர்.

அப்போது—

(தொடரும்)

# உப்பும் இரத்த அழுத்தமும்

- A. விமலச்சந்திரன் -

உப்பில்லாப் பண்டம் குப்பை யிலே. உணவுக்கு உப்பு மிக அவ சியம். ஆனல் உப்புக்கும் இரத்த அழுத்தத்திற்கும் சம்பந்தம் உண் டா?

உண்டு. இது இன்றைய விஞ் ஞானிகளின் பொதுவான முடிபு. இரத்த அழுத்தம் அதிகரிப்பதற்கு உப்பும் ஒரு காரணம் என்கின் றனர். உப்பில்லாப் பத்தியம் பல நோயாளிகளுக்கு இரத்த அழுத்தத் தைக் குறைக்கிறது.

உப்பை உருசி பார்க்கும் ஆரா ய்ச்சியொன்று அண்மையில் நடந் தது. ஜான் ஹாப்கின்ஸ் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த மூன்று மருத் துவ விஞ்ஞானிகள் இந்த ஆராய்ச் சியை நடத்தினர்.

உப்பு அல்லது சர்க்கரை கலந்த நீர் ஒரு கோப்பையிலும், சுத்த நீர்மூன்று கோப் பையிலுமாக ஒரு வரிசைக்கு நான்கு கோப்பைகள் வீகிதம், பலவரி சைகள் வைக்கப் பட்டன. ருசி பார்க்க வந்தவர்கள்முத லில் ஒரு கோப்பையிலுள்ள நீரை உருசி பார்த்த பின்னர், வாயை நன் ருகக் கொப்பளிக்கவேண்டும். அப்படி யாக நான்கு கோப்பைகளை உருசி பார்க்கவேண்டும். ஒவ்வொருவராக உருசிபார்த்தபின்னர் எந்தக் கோப் பையில் உப்பு அல்லது சர்க்கரை கரைந்திருக்கிறது என்று அவர்கள் சொல்ல வேண்டும்.

உப்புக் கரைந்திருக்கிற கோப் பையைச் சுட்டிக்காட்ட, இரத்த அழுத்தம் அதிகம் இருந்தவர்களுக்கு, இரத்த அழுத்தம் சாதாரணமாக இருப்பவர்களைவிட, இன்னும் அதிக உப்பு கரைத்துக் கொடுக்க வேண்டி யிருந்தது. இன்னும் சிலருக்கு 30 மடங்கு கூட உப்புக்கரைக்கவேண்டி யிருந்தது. அப்பொழுது தான் நீரில் உப்பு இருக்கிற தென்பதை அவர் கள் உணர்ந்தனர். இனிப்பைக் கண்டுபிடிக்கும் ஆற்றலில் அவ் வளவு வேற்றுமையில்லை.

உப்பு அதிக இரத்தமுள்ள நோயாளிகளின் சிறு நீரில் அதிக மாக காணப்படுகிறது. இதனல்தான் அவர்கள் அதிகமான உப்பை சேர்த் துக் கொள்கிருர்களோ? அல்லது அளவுக்கு மிஞ்சி உப்பைச் சேர்த் துக் கொள்வதும் இரத்த அழுத்தம் அதிகமாவதற்குக் காரணமா? இதை அறியவேண்டியது அவசிய மென்கின்றனர், ஆராய்ச்சி நடாத் திய ஜான் ஹாப்கின்ஸ் பல்கலைக் கழக மருத்துவர்கள்.

உப்பு அதி கமாக உட்கொள் வது ஏற்கனவே இரத்த அழுத் தத்தை அதிகரிக்கக்கூடிய உடல் நிலையில் உள்ளவர்களுக்கு அந்த நோயை வெகு விரைவில் கொண்டு வரும் என்ற கருத்து இருக்கிறது.

உப்பு உட்கொள்வது பற்றிய இந்த ஆராய்ச்சி முடிபு, சரியாக இருந்தால். இரத்த அழுத்த அதி கரிப்பு நோய் விரைவில் வரக்கூடிய நிலையில் இருபபவர்கள், உண வில் அதிக உப்பு சேர்தது்க் கொள் வார்கள், என்கின்றனர் ஜான் ஹாப் கின்ஸ் பல்கலைக் கழகத்து ஆய்வா ளர்கள். ஏனெனில் அவர்களுககு மற்றவர்களைவிட அதிகமாக உப்பு உபயோகித்தால்தான் உப்பின் உருசி தெரிகிறது.

# சமத்துவம்

காலத்தை உடலாக்கி, வரலாற்றை உயிராக்கி வைரம் பாய்ந்து, அடர்ந்து செழித்து கிளை விரித்து சுற்றம் பரப்பி நின்ற அது ஒரு—

காலவிருக்ஷம்!

அதனை அண்டி அழகான நீராழி! பசுமை கொழிக்கும் வயற்பரப்பு! எல்லாவற்றிற்கும் ஆணிவேர்—

அந்த மரம்!

கிளைகள் ஒவ்வொன்றும்' தொங்குதோட்டங்களா?...

பச்சைப் புடவையில் ரத்தத்துளிகளாக... சின்ன இதழ் விரித்து போதவிழ... புள்ளினம் பூரித்து மகிழ...தென்றல் கொஞ்சு மொழியில்இன்ப ரகசியம் பேச...எங்கும் மகிழ்ச்சிப் பிரவாகம்!... அப்போது—

எங்கிருந்தோ அந்தப் பறவை பறந்துவந்தது. அதன் வாயில் மணிமணியான பழக் கொத்து... மரக்கிளையிலமர்ந்தது. அலகுகள்கனிகளை 'ருசி' பார்க்கத் தொடங்கின! பழங்கள் ஒவ்வொன்றாக அதன் மென் வயிற்றில் இறங்கலாயின...

உண்ட களைப்புக்கு கிளை 'பாய்'விரித்தது.

கண் மூடிய ஞானி நிலையில், உண்ட வீட்டுக்கு இரண்டகம் செய்கிறோமென்ற பிரக்ஞையின்றி கிளையிலேயே எச்சமிட்டது. சிறிது நேரத்தில் அது—

பறந்தே போய்விட்டது.

அதற்குத் தெரியுமா தான் எவ்வளவு பாதகத்தை—விபரீதத்தை – அம் மரத்திற்கு ஏற்படுத்திச் செல்கிறோமென்று?...

பருவம் மாறத் தொடங்கியது...

காலாஸ்திரம் பாய்ந்த அதிர்ச்சியால் இலைகள் உதிரத் தொடங்கின...

## 2

மாரி வந்தது! இலைகள் துளிர்த்தன!...பசுமைக் கோலம், அழகு சமைத்து...பச்சைச் சுடர்களாக துளிர்கள் தகதகத்தன! காலவிருக்ஷத்துக்கு குமரிப் பெண்ணின் லாவண்யம்...

காலவிருக்ஷம் தன்னை ஒருமுறைபார்த்துக் கொண்டது!...

'ஆ!...யாரிந்தப் புதிய விருந்தினன்!... எப்போது இவன் இங்கேவந்தான்...எப்படி இங்கு குடியேறினான்...' —என்ற வியப்போடு தனது பார்வையைச் செலுத்தியது. அங்கே—

மரத்தின் கிளையொன்றில், பழத்தினின்றும் தலை நீட்டும் 'வெண்புழுவென மென் பசுமை கோலமிட, இளந்தளிர்க் கொடியொன்று காற்றிலே அசைந்தாடிக் கொண்டிருந்தது.

'யாரிந்தக் குழந்தை யார்...தவறவிட்டார்கள்!...' என்ற பரபரப்பில் கண்களை நாலா பக்கமும் ஓடவிட்டது.

சூன்யம்.

பதினாறும் பெற்ற, தாய்மையேஉணர்வாகக் கொண்ட மரத்தின் தாய்மைக் குமிழிகள் உடையலாயின!

'பாவம்! பச்சிளங் குழந்தை!'

பச்சைப் பசுங் கொழுந்தை அன்புடன் அணைத்து, தடவிக் கொடுத்தது.

தன் இரத்தத்தில் ஒரு பகுதியை தியாகம் செய்ய...

பசுங்கொடியும் நாளொரு வண்ணமும், பொழுதொருமேனியுமாக செழித்து வளரலாயிற்று...

## 3

செம்பியன் செல்வன்

உலகின் பல பாகங்களிலிருந்தும் பறவையினங்கள் கூட்டம் கூட்டமாக வரத் தொடங்கின!...தன் வளர்ச்சிக்கேற்ப எண்ணங்களையும், கோட்பாடுகளையும் லட்சியங்களையும் மனிதன் மாற்றிக் கொள்வதைப் போல, அந்தப் பறவையினங்களும், பருவ மாறுதலுக்கேற்ப 'சுகஜீவனம்' விரும்பி தமது நாட்டைவிட்டு வரத் தொடங்கின!...

கலகலப்பு தோன்றிவிட்டது.

அப்படித்தான் அந்தப் பறவையும் எங்கிருந்தோ வந்து சேர்ந்தது. ஏனைய பறைவைகள் ஆச்சரியத்துடன் அதனைப் பார்க்கத் தொடங்கின!...

அதன் சிவந்த மேனியில் பொட்டுப் பொட்டாகக் கரும்புள்ளியிட்டவிசித்திர கோலமும்... வக்கிர குணமும்... அவைகளை ஆச்சரியத்தில் ஆழ்த்திவிட்டன!

எங்கோ பரந்த கிழக்கு நாடொன்றிலிருந்து வந்ததாகக் கூறிப்பெருமையடித்துக் கொண்டது. தனது நாட்டைப்பற்றிக் கதைகதையாக எவ்வளவோ கூறியது. அதுகூறியதன் பெரும் பகுதி ஏனைய பறவைகளுக்குப் புரியவில்லை... அந்த நாட்டின் பெயர்கூட பறவைகளின் வாயில் நுழையவில்லை.

எல்லாப் பறவையினமும் ஒன்று கூடிச்சந்தோசமாக ஜீவிக்கலாயின...

அன்று!

அந்த விசித்திரப்பறவை மரக்கிளைகளில் தத்தித் தத்தி நடந்து சென்றது... கிளையில் படர்ந்திருந்த புதிய படர் கொடியைக் கண்டது.

—வியப்பு!

—சிந்தனை!

ரௌத்திரம்!

'இதென்ன வேற்றுமை ... ஜனனத்தில் இப்படி ஒரு வேற்றுமையா?...'

"பார்!...இந்தக் கொடிய விருக்ஷத்தை ... எவ்வளவு பலசாலியாக உண்டு கொழுத்துப் போயிருக்கிருன்...ஆனுல் இக் கொடியோ ... இம் மரத்தின் ஒருபாகமே... எவ்வளவு பலவீனனுக ... தென்றலுக்குக் கூட தாக்குக் கொடுக்க இயலாத 'சோனி'யாக...சீ!...இதென்ன கொடுமை!...அக்கிரமம்!..."

—கொடியைப் பரிதாபமாக நோக்கி இரங்கியது.

"ஏன் அப்படிப் பார்க்கிருய்?... என்றது படர் கொடி.

"உன் நிலையைக் கண்ணுற்ருல் கல் நெஞ்சுக்காரனும் கலங்குவானே!"— என்றது பறவை.

"ஏன்?...என் நிலைக்கென்ன?..." என்று பரபரப்புடன் கேட்டது படர்கொடி.

"உனக்கு உன் உடலால்சுயமாக நிற்கத்திராணியில்லை... பலமில்லை...... வலுவில்லை ...... பிடித்தால் ஒடிந்துவிடும் நிலையாயிருக்கிருய்...ஆனுல் இந்த விருட்சத்தைப்பார்... எவ்வளவு பலசாலியாக இருக்கிருன்..."

"என்ன செய்வது?... அதன் உடல் வாகு அப்படி!... அது இயற்கையின் நியதி!..."

"எது இயற்கையின் நியதி!... ஒருவன் சொத்தை ...ஒருவனுக்கு சேரவேண்டிய உணவை...தனது தேவைக்குமேல் உண்டு கொழுப்பதா உலக நியதி?... மற்றவனின் வயிற்றில் மண்ணடிப்பதா இயற்கை நியதி!...ஆமாம் நீயென்ன செய்வாய்!...நீ வாழும் உலகம் அப்படிப்பட்டது!...அதனுல் கூறுகிருய் அப்படி...ஆனுல் நீ கிழக்கு நாடுகளுக்கு வந்திருக்க வேண்டும்...ஏன் எங்கட நாட்டை எடுத்துக் கொள்ளேன்!..."

—என்று தனது நாட்டின், பிரயாண அனுபவங்களை அழகாக, கவர்ச்சி

யாக எடுத்துக் கூறத் தொடங்கியது!..

"எங்கள் நாடுகளிலெல்லாம் ஆரம்பத்தில் இப்படித்தானிருந்தன!... ஆனல் உன்னைப்போல் அடக்கப்பட்டு வலியிழந்திருந்த மக்கள் கூட்டம் திரெண்டெழுந்தபோது, சர்வாதிகார ஆதிக்கம் பிடித்த, இந்த விருட்சத்தைப்போன்ற ஆட்சியே அழிந்தொழிந்தது!... இதற்குத்தான் உலக வரலாறு நன்கு தெரிந்திருக்க வேண்டுமென்பது!..." —பறவை ஏதேதோ பேசிப்படர் கொடியை மயக்கியது.

"அதுசரி!... ஆனல்...எனக்கு அப்படிஎந்தவித வஞ்சமோ...அடக்குமுறையோ இந்த மரம் நடத்தவில்லையே" என்றது.

"அப்படித்தான் நீ உன் அறியாமையினல் கூறுவாய் என எனக்குத் தெரியும்...உன் அறியாமை அகலுமட்டும்...நீ அடக்கப்பட்டே இருப்பாய்... இதோபார் நீ இப்படி வலிகுன்றியிருக்க ...விருக்ஷம் பலசாலியாக இருக்கக் காரணம் என்ன தெரியுமா? உனக்குச் சொந்தமான 'ஜீவரசத்தை'க் கூட உனக்குத் தராமல் தானே உறுஞ்சுகிறது...உன்மீதுவிழ வேண்டிய அமுதக் கதிர்களையும் தானே தாங்கிக் கொள்கிறது...இதனல் தான் உனக்கு இந்த நிலை..."

"அப்படியானல் நான் என்ன செய்ய வேண்டும்!..." எனக்கேட்டது படர்கொடி.

"நீ உனது உரிமைக்காக...சமத்துவம் பெறுவதற்காக ... சுதந்திர வளர்ச்சிக்காக போராட வேண்டும்!..."—என்றது பறவை.

படர்கொடி சிந்தனையிலாழ்ந்தது.

பறவை வசந்தகாலம் முடிந்ததும் தனது தாய் நாட்டிற்குப் பறந்து போய்விட்டது!

## 4

படர் கொடிக்கும் விருக்ஷத்துக்குமிடையே இப்போது பெரும்பகை ஏற்பட்டு வந்தது!

"சண்டாளன்!..." என் பலத்தை எல்லாம் திருடும் நாசகாரன்!... சமுதாய விரோதி!..."—என்றெல்லாம் ஓயாமல் திட்டிக் கொண்டு வந்தது படர் கொடி.

காலவிருக்ஷத்துக்கு மனத்தாங்கல்!

"நான் என்ன தவறு செய்தேன்!... இருக்க இடம் கொடுத்தேன்!...என்னுயிரில் பங்குகொடுத்து நீயும் வாழு என்று அரவணைத்தேன்!...அதற்குப் பிரதியுபகாரமா?.. என்ன இருந்தாலும் இன்னெருவன் பிள்ளைதானே!..."

—படர் கொடியின் சீற்றத்துக்கு அது காரணம் அறியவில்லை.

படர் கொடியின் உள்ளத்தில் நச்சுவிதை விழுந்து விட்டது. அந்த நச்சு எண்ணமே அதன் வளர்ச்சியை உருக்குலைத்துவர, அது 'நராங்க'த் தொடங்கியது.

## 5

ஒருநாள் படர்கொடிக்கு வித்திட்ட பறவை வந்தது. படர் கொடியைக் கண்டது.

"ஓ!...நீயா?...சுகமாக இருக்கிருயா?...உன்னை உன் வளர்ப்புத் தாய் நன்ருய்க்கவனிக்கின்ருளா?..." எனக் கேட்டது.

"வளர்ப்புத்தாயா?... யாரவள்"—படர்கொடி வியந்தது.

"யாரா?... யாருன்னை வளர்க்கிருர்களோ? அவர்கள்!..."

"யாரென்னை வளர்க்கிருர்கள்...?"

—கலகலவெனப் பறவை சிரித்தது.

"வேறு யார்? ... இந்த மரமே உனது வளர்ப்புத்தாய்!"

"இதுவா, வளர்ப்புத்தாய்!... என் ரத்தத்தையெல்லாம் உறிஞ்சி எடுக்கும் நாசகாரியல்லவா?...! 'வாழு! வாழ விடு!...' என்ற தத்துவமே இதற்குத் தெரியாதே!... இதுவா என்னை வளர்க்கப்போகிறது?" —என்று ஏளனமாகக் கேட்டது.

"அடபாவமே!... உனக்கேன் இந்தக் குணம்... இந்த எண்ணத்தால்தான் நீ இதன்மேல் கோபம் கொண்டிருக்கிருயா?... உனக்கு யார் இந்த துர்ப்போதனை செய்தார்கள்... அது உன்னிடமிருந்து ஜீவரசத்தைப் பெறுவதாக எப்படிக் கூறுகிருய்?... ஏன், நீயே அதனிடமிருந்து பெறுவதாக ஏன் கூறக்கூடாது?...

...உன் சமதர்மத்தை நிலைநாட்டுவதில் கவனமாக இருக்கிருயே... சமதர்மம் என்ருல் என்ன என்று உனக்குத் தெரியுமா?... எது சமதர்மம்... விருக்ஷம் பெறும் ஜீவரசத்தில் சமபங்கை—பாதியை – உன்னிடம் தந்தால் அது எப்படி சமதர்மம் ஆகும்?... ஏனெனில் அதன் வளர்ச்சிக்கு... அதன் விருத்திக்குத் தேவையான ஜீவரசம் உனக்குச் சமபங்கு தந்தால் குறைந்துவிடும்... அப்போது உன் தேவைக்கு மீறிய ஜீவரசத்தைப் பெற்று முதலாளித்துவம் பெற்றுவிடுவாய்!... அப்போது நீயே சர்வாதிகாரியாக மாறிவிடுவாய்... ஆகவே தேவைக்கேற்ப பங்கு பெறுவதுதான் சமதர்மமே ஒழிய பொருட்களைப் பிரிப்பது சமதர்மமல்ல!...

...நீயோ நன்றிகெட்ட தனயாக...யாரோ சொன்ன பேச்சைக் கேட்டு, பெற்ற அன்னைபோல் வளர்த்த இவ்விருக்ஷத்தைத் துன்புறுத்திவிட்டாயே!... அதனிடம் மன்னிப்புக்கோர்!..."

படர்கொடி ஞானஒளி பெற்ற தபஸ்வி ஆகியது.

இப்போது—

காலவிருக்ஷத்தை அன்புடன் இறுகத் தழுவியவாறு, படர்ந்து ஜீவித்து வருகின்றது.


ஈழத்திலும் இந்தியாவிலும் புகழ்பெற்ற

**ஜெகஜோதி**

**பற்பொடியை உபயோகித்து**

உங்கள் பற்களைப் பாதுகாப்பாக வைத்திருங்கள்.

விநியோகஸ்தர்கள்:

**ஜெகஜோதி அன் கோ**

குருதேனியா.



# தென்னிந்தியாவும் தொல்லிலங்கையும்

த திருநாவுக்கரசு எம். ஏ. எம் லிட்.

(ஆனி - ஆடி இதழ் 9ம் பக்கத் தொடர்)

## 6 நகார்ச்சுனரும் இலங்கையும்

மௌரியப் பேரரசின் வீழ்ச்சிக்குப் பிறகு இந்தியாவில் ஆந்திரப் பேரரசு தலைதூக்கியது. ஆந்திர மன்னர்களில் பலர் புத்தசமயத்தைத் தழுவியதோடு, நாட்டிலே அச்சமயத்தைப் பரப்ப பலவகையில் முயன்றனர். அசோகனுக்குப்பிறகு புத்தசமயத்தைப் போற்றிவளர்த்த பெருமை சாதவாகன (ஆந்திர) மன்னர்களையே சாரும். அக்காலத்தில் (கி.மு. 52—கி.பி. 250) அமராவதி, நாகர்ச்சுனகுண்டம் முதலிய நகரங்களில் ஈடுஇணையற்ற புத்த சமயச்சார்பான சிற்பங்கள் செதுக்கப்பட்டன. அவற்றுள் பல இன்றும் அழியாது காண்பார் கண்ணையும் கருத்தையும் கவர்கின்றன. இவ்வாறு புத்தசமயமும், புத்தசமயச் சார்புடைய கலைகளும் ஆந்திர நாட்டில் செழிப்புற்றுச் சிறந்து விளங்கிய காலத்தில், இலங்கையில் புத்த சமயம் போற்றப்பட்டுப் பேரார்வத்துடன் வளர்க்கப்பட்டு வந்தது. இதனால் இலங்கைக்கும் ஆந்திர நாட்டிற்கும் நெருங்கிய தொடர்புண்டாயிற்று.

இலங்கையில் புத்தசமய நூற்கள் பேரளவில் சேமித்து வைக்கப் பட்டிருந்தன. அதனால் அந்நாட்டிற்கு இந்தியாவிலிருந்து எண்ணற்ற பௌத்ததுறவிகளும் அறிஞர்களும் சென்றுவந்தனர். நாகர்ச்சுனரும், ஆரியதேவரும் அந்நாட்டுடன் தொடர்புகொண்டிருந்தனர். பிற்காலத்தில் புத்ததேவரும் புத்ததத்தரும் இலங்கையின் நூல்நிலையங்களை நன்முறையில் பயன்படுத்தினர்.(4)

நாகர்ச்சுனரின் சீடர்களாக விளகியவர்களுள் இலங்கையைச் சேர்ந்த பௌத்த துறவிகள் இங்கே குறிப்பிடத்தக்கவராவர். இலங்கையைச் சேர்ந்த ஆரியதேவர் நாகர்ச்சுனரின் சீடர்களுள் சிறப்புமிக்கவராவர். அவருடைய வாழ்நாளின் பெரும்பகுதி நாகர்ச்சுனரிடம் சமய சாத்திரங்களைக் கற்பதிலேயே கழிந்தது. அவர் தம் வாழ்நாளின் இறுதிக்காலத்தில் இலங்கைக்குச் சென்று பௌத்தசமயத்தின் வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டார்.

கி. பி. நான்காம் நூற்றுண்டில் சோழர்களின் பழைய தலைநகராகிய உறையூரில் பிறந்துவளர்ந்த புத்த தத்த மகாதேரர் என்பவர் இரு முறை இலங்கைக்குச்சென்று பௌத்தசமய நூல்களைப்பயின்று சோழநாட்டிற்குத் திரும்பிவந்தார். பிறகு அவர் பாலிமொழியில் 'அபிதம்மாவதாரம்' 'விநயவிநிச்சயம்' என்னும் இரு நூற்களை எழுதியருளினர்.

---

4. K. R. Subramaniam: Buddhist Remains in Andhra, P. 141

காலம் செல்லச்செல்ல இலங்கையிலிருந்த புத்தத் துறவிகளிடையே உண்டான போட்டி மனப்பான்மையும் தன்நலப்போக்கும் அவர்களை அரசியலில் ஈடுபடுமாறு செய்தது. அரசமரபைச்சார்ந்த இளவரசர்களிடையே ஆட்சி உரிமைக்காகப் போட்டி எற்பட்டபோதெல்லாம் அவர்கள்மாறுபாடுடையபுத்தசங்கங்களுள் ஒன்றின் ஆதரவைப்பெற்று அரசர்களாயினர். அரசரானவுடன் தங்களுக்கு எதிர்ப்பாகஇருந்த புத்த சங்கத்தை அழிக்கத்தொடங்கினர். இத்தகைய சூழ்நிலையில் (கி.பி நான்காம் நூற்றுண்டில்) மகாசேனன் என்பவன் இலங்கையில் அரசஞைன். உடனே மகாவிகாரைத் துறவிகள் அனைவரையும் துன்புறுத்திஞன். பதவிப் போராட்டத்தில் தனக்கு உதவியாக இருந்த அபயகிரி தம்மருசி சங்கத்திற்கே பேராதரவு தந்தான்.

மகாசேனனின் மகனை மேகவர்மனின் (கி. பி. 325-379) ஆட்சி இலங்கையின் வரலாற்றில் சிறப்பிடம் பெற்றுள்ளமை கருதத்தக்கதாகும். இந்தியப் பேரரசரான சமுத்திரகுப்தனேடு மேகவர்மன் நட்புறவு கொண்டிருந்தான். அவன் குப்தமன்னனின் உதவியைப் பெற்றுக் கலிங்கத்திலிருந்து புத்தரின் எச்சமாகவிளங்கிய 'பல்லை'க் கொண்டுபோய் தன்னுட்டில் தாதுகோபுரம் ஒன்றில் வைத்துப் புனிதமிக்கதாக அதைப் போற்றிஞன்.

(தொடரும்)

---

# விமர்சனப் போட்டி

## பரிசு: ரூபா. 25-00

1 விமர்சனத் துறையில் ஈழத்து இலக்கிய இரசிகர்களை ஊக்குவிப்பதற்காகவே "கலைச்செல்வி" இப்போட்டியை நடாத்துகின்றது. இலக்கிய ஆர்வமுடைய அனைவரும் இப்போட்டியில் பங்கு பற்றலாம்.

2 கவிஞர் ச வே. பஞ்சாட்சரம் எழுதிய "எழிலி" என்ற காவியமே விமர்சனத்திற்கு உரிய நூல்.

3 "எழிலி" பற்றிய விமர்சனக்கட்டுரை 'புல்ஸ்காப்' தாளில் மூன்று பக்கங்களுக்கு மேற்படக்கூடாது. தாளின் ஒரு பக்கத்தில் மையினுல் எழுதப்படவேண்டும்.

4 விமர்சனக் கட்டுரைகள் அனைத்தும், 30.11.63 க்குப் பிந்தாமல் அனுப்பப்படவேண்டும்.

5 முதலாவது பரிசாக 15.00 ரூபாவும், இரண்டாவது பரிசாக 10.00 ரூபாவும் வழங்கப்படும். பரிசு பெருத கட்டுரைகளைத் திரும்பப் பெற விரும்புவோர், கட்டுரையுடன் போதிய தபால் தலைகளையும் சேர்த்து அனுப்பவேண்டும்.

6 கட்டுரைகள் அனுப்பவேண்டிய முகவரி: "கலைச்செல்வி' கிளை அலுவலகம், கந்தரோடை, சுன்னுகம்.

# எழுத்தாளன்!

### போ. சண்முகநாதன்

"எல்லாரைப் பற்றியும் எழுதுகிருயே! எழுத்தாளனைப் பற்றியும் எழுதினுல் என்ன? எழுத்தாளனது வாழ்வு அவனது நடத்தை ஆகியவைகளை அறிந்துகொண்டால் நாங்களும் எழுத்தாளனுக ஒருவேளை ஆகலாமே!'' என்று பலர் என்னைக் கேட்டுக்கொண்டிருக்கிருர்கள்.

நான் அடிக்கடி யாழ்நகரிலே பல எழுத்தாளர்களைக்கண்டு வருகிறேன். அவர்களைக் கொண்டு எழுத்தாளர்களுக்கு இருக்கும் இலக்கணங்கள் இவைதாம் எனச் சில குறிப்புகளையும் குறித்து வைத்திருக்கிறேன். எழுத்தாளனைப்பற்றி அறிய விரும்புபவர்களுக்கும் எழுத்தாளனுக வர விரும்புபவர்களுக்குமாக அந்தக் குறிப்புகளை இப்பொழுது இதோ தருகிறேன்.

எழுத்தாளன் கையிலே ஒரு பைலையோ அல்லது மடித்த செய்தித் தாளையோ பிறர் கண்ணில் நன்கு தெரியும்வண்ணம் வைத்திருப்பான்.

எழுத்தாளனை அதிகமாக தேநீர்க்கடை, புத்தகக்கடை, தெருச் சந்தி, மர நிழல் ஆகிய இடங்களில் யாருடனே அல்லது இன்னெருரு எழுத்தாளனுடனே உரையாடிக் கொண்டிருக்கக் காணலாம்.

எழுத்தாளன் பத்திரிகைக் கடைக்குப் போனுல் ஒன்றும் வாங்கமாட்டான். அப்படி வாங்குவதென்றுல் மலிவான ஒரே ஒரு பத்திரிகை வாங்குவான். மற்றும்படி புத்தகக் கடையில் கடைக்காரனுக்கும் வாங்க வருபவர்களுக்கும் இடைஞ்சலாக நின்றுகொண்டு எல்லாப் பத்திரிகை புத்தகங்களையும் கிளறிக் கொண்டும் விரித்து மேற்போக்காகப் படித்துக்கொண்டும், (மன்னிக்கவும்) பார்த்துக் கொண்டும் இருப்பான். பின் அப்படி அப்படியே போட்டுவிட்டுப் போய்விடுவான்.

எழுத்தாளன் நூல்நிலையத்திலோ தனியே இருக்கும்போதோ பேனுவைத் திறந்து கையில் வைத்திருந்தபடி அல்லது கை ஆள்காட்டி விரலை (சில வேளை, பேனை) நெற்றியிலோ வாயிலோ வைத்தபடி யாரையோ பறிகொடுத்தது போல் காட்சியளிப்பான். (இதை 'கற்பனை செய்கிருர்' என்பார்கள் அறிவில்லாதவர்கள்)

எழுத்தாளன் சைக்கிள் வைத்திருப்பவனுனுல் அவனது சைக்கிளில் கரியர், ஸ்ராண்ட், டைனமோ, லையிட், பெல் (இருந்தாலும் அடிக்காத) பிரேக் (இருந்தாலும் பிடிக்காத) ஆகியன இல்லாத மிகப் பழையதாக இருக்கும்.

எழுத்தாளன் மாலை வேளைகளில் இன்னெருரு எழுத்தாளனேடு அல்லது இளம் எழுத்தாளனேடு தெருவைச் சுற்றி வருவான். சுற்றுலாவின்போது அவன் மெதுவாக

வும் பராக்குப் பார்த்தபடியும் (இதெல்லாம கற்பனை செய்வதற்கு அடையாளமாம்) வெற்றிலையைக் குதப்பியபடி அல்லது சிகரெட்டை ஊதியபடியும் செல்வான். அவனது சுற்றுலா அநேகமாக கஸ்தூரியார் வீதி, ஆசுப்பத்திரி வீதி. மணிக் கூட்டு வீதி, முற்றவெளிவீதி ஆகிய வீதிகளின் வழியாகவே செல்லும்.

எழுத்தாளன், தெருவிலே விபத்துகள் நடந்தால் அல்லது ஏழைகளைக் கண்டால் உள்ளமுருகி விடுவான். நெடுநேரம் அங்கேயே நின்று கவலைப்படுவான். ஆனால் உதவி செய்யவோ ஒரு சதம் ஈயவோ மட்டும் துணிவோ மன மோ அவனிடம் கிடையாது. அவன் செய்யும் ஒரே பணி தனது பேனை க்கு மட்டும் வேலை கொடுப்பதே!

இதுவரை எழுத்தாளனைப் பற்றிய குறிப்புகள் சிலவற்றைத் தந்தேன். எழுத்தாளனாக வர விரும்புபவர்கள் இதன்படி நடந் தால் நிச்சயம் அவர்கள் எழுத் தாளர்களாக மதிக்கப் படுவார்கள். (நான்கூட இப்படியாக நடந்து கொண்டிருக்கின்ற எழுத்தாளர்கள் அல்லாத சிலரை எழுத்தாளர்கள் என்று நம்பி ஏமாந்திருக்கிறேன் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.)

எழுத்தாளர்கள்போல் நடித்து எழுதாமலேயே எழுத்தாளர் பட் டம் பெற்றவர்களை சிலர் "நீங்கள் இதுவரை என்ன எழுதுகிறீர்கள்? என்ன புனைபெயரில் எழுதுகிறீர் கள்?" என்ற கேள்வி ஒன்றைப் போட்டுத் திணறடிக்கப் பார்ப்பார் கள். இதற்கும் ஒரு வழி கூறி விட்டு இக்கட்டுரையை முடித்து விடுகிறேன்.

சில பிரபல எழுத்தாளர்கள் பிரச்சினைக்குரிய சில கட்டுரை களையோ கதைகளையோ சிலபல காரணங்களுக்காக புதுப் புதுப் புனைபெயர்களில் மறைந்திருந்து எழுதுவது வழக்கம். அப்படியான கதை கட்டுரைகளையும் புனைபெயர் களையும், எழுதாது எழுத்தாளர் பட்டம்பெற விரும்புபவர்கள் பயன் படுத்தலாம். எடுத்துக் காட்டாக, "சுதந்திரனி"ல் 'நமக்குள்ளே நடப்பவை' என்ற தொடரைஎழுது பவன் 'நான்தான்" என்றும் 'கலைச் செல்வியில் 'திருடாதே' கட்டு ரையை எழுதிய "பால்ராஜ்" அடி யேன்தான்" என்றும் சொல்லலாம்

இப்படிச் சொல்வதால் மேற் படி கட்டுரைகளை உண்மையில் எழுதியவர்களின் பகையைத் தேடிக்கொள்ள வேண்டிவரும் என்று எண்ணத் தேவையில்லை. மாறாக அவர்கள்கூட மகிழ்ச்சி அடைவார்கள். ஏனென்றால் அவர் கள் தங்கள் உண்மைப் பெயர் வெளிவருவதை எக்காரணங் கொண்டும் விரும்பாதவர்கள்.


தயாராகின்றன!

**கலைச்செல்வி**
**நவராத்திரி மலர்**

**கலைச்செல்வி**
**தீபாவளி மலர்**

# நினைவும் நடப்பும்

**- முருகு -**

'நீ, நீயும் ஒரு மனிதனா?'

நுண்கலைக் கல்லூரியில் கற்ற போதும்,மனித உள்ளங்களைப்பற்றி முக்கியமாக ஏழைகளைப்பற்றி அறியாத நீ... ஒரு அயோக்கியன்."

"சந்தர்ப்பமும் சூழ்நிலையும் கெடுத்துவிட்டன. அதற்கு யான் என்னசெய்ய?"

"சந்தர்ப்பத்தையும் சூழ்நிலையையும் உருவாக்கியவன் யார்? நீயன்றி பிறரில்லையே."

"நண்பர்களின் வேண்டுகோளிற்கிணங்கச் சென்றேன், இப்படி வருமென்று யார் கண்டார்கள்? வாழ்க்கையில் நடப்பவையெல்லாம் முன்னரே பறைசாற்றிக் கொண்டா வருகின்றன?"

"என்னதான் சமாதானம் கூறிய போதும் நீ விரும்பியிருந்தால் அதைத் தடை செய்திருக்கலாம். தடை செய்யாத போது நீயும் அதில் சம்பந்தப்பட்டுள்ளாய் என்பது தானே அர்த்தம்."

"ஏன் இந்த எண்ணங்கள்? பேசாமல் தூங்கு."

போர்வையை இறுக மூடிக் கொண்டு மறு பக்கம் புரண்டு படுத்தான்.

சுவர் மணி இரண்டு முறை 'டங், டங்" என்று அடித்தது.

கட்டாக்காலி நாய்கள் நிசப்தத்தைக் கலைத்தன.

சினிமாவில் வந்த அழகான நாயை நினைத்துப் பார்த்தான். பழையபடி சிந்தனை.

ஏழை விவசாயி ஒருவனின் வாழ்வைச் சித்தரிக்கும் படம்.

"நடிப்பிலே விவசாயியினது வறுமையைக் கண்டு கண்ணீர் உகுத்த நீ, ஓர் ஏழையின் வயிற்றுப் பிழைப்பைக் கெடுத்து விட்டாய்" குற்றம் சாட்டியது ஒருமனம்

"மற்ற மாணவ நண்பர்கள் தானே அக் கொடிய செய்கையைச் செய்தவர்கள்."

'றிக்சாவைப் பற்றி இழுத்ததை, படுத்திருந்த றிக்சாக்காரனுக்குத் தெரியாது. அவர்கள் எடுக்கும் போது நீ அவர்களைத்தடுத்து நிறுத்தியிருக்கலாமே?"

"ஏழை றிக்சாக்காரன் நாளை என்ன செய்வான்? உங்களிற்கு றிக்சாவை இழுத்துச் சென்று இரவு வேளையில் பிறிதொரு இடத்தில் விட்டுச் செல்வது இன்பமாக விருக்கலாம். ஆனால் றிக்சாக்காரனுக்கு?"

"ஐயோ" போதும் இந்தச் சிந்தனைகள். நித்திரை வழக்கத்தில் படுத்தவுடன் வருவது" இன்று வராது என்னைக் கொல்லாமல் கொல்கின்றதே"

"உனக்கு நித்திரை வராத துக்கம், நாளை அவ்வேழை றிக்சாக்காரன் தன் றிக்சாவைக் காணாது துக்கிப்பது எவ்வளவு பெரியது?"

"அட பாவிகளே றிக்சாவை சாலையோரத்தில் தன்னும் நிறுத்தினீர்களா? இல்லையே, கொண்டு சென்று போயும்போயும் புகைவண்

டிக் கடவையில் அல்லவா நிறுத்தி யுள்ளீர்கள்?''

''விடியற்காலை நான்குமணிக்கு ரெயில் கொழும்பைநோக்கிச் செல்லும்"

''என்ஜின் டிறைவர் றிக்சாவைக் கண்டு நிறுத்துவாரு?''

''கேள்வியைக் கேட்காதே. சென்று பழையபடி றிக்சாவைக் கடவையிலிருந்தும் விலத்திவைத்துவிட்டு வா"— உள்ளம் ஏவியது.

மெல்ல எழுந்தான்.

''ராஜு, பிளீஸ் ரேக் யுவர் பெட், என்னை நித்திரை கொள்ள விடும், படம்பார்த்து அலுப்பு"— அறை நண்பனது வேண்டுகோள்.

பழையபடி படுக்கையை நாடினுன்.

'இப்ப நான் போய் எடுத்து வைத்திருந்தால்? சே, கெடுத்து விட்டான் நண்பன்"— பழையபடி எண்ணப் புயல்.

''நீ எடுத்து வைக்கும்போது, பொலீஸ்காரன் கண்டால்?-எண்ணவே நடுங்கியது.

''நண்பன் தடுத்தது ஓரளவுக்கு நன்மையே."

''உனது நன்மையைத்தான் கருதுகிருய். அன்று நீயெழுதிய கதையின் சாரமென்ன? ஏழையைப் பற்றி எழுத்தில் வடிக்கும் நீ அவனிற்காக பொலீசினுல் தண்டிக்கப் பட்டாலும், அதை உவந்து ஏற்க வேண்டும்."

''என்னை நம்பியுள்ள தங்கை மாரினதும், அன்னையதும் கதி?"

''உன்னை நினைக்கும் நீ ஏழை றிக்சாக்காரனின் குடும்பத்தை நினைத்துப்பார்.''

திரும்பிப் படுத்தான்.

யன்னல் துவாரத்திற்கூடாகச் சந்திரிகையின் ஒளி வந்துகொண்டிருந்தது. வழக்கமாக வழிபடும் யேசுநாதரின் திருவுருவப்படம் மங்கலாகத் தெரிந்தது.

''ஆண்டவனே நான் செய்த பிழையை மன்னித்துக்கொள்ளும். பாவிகளை இரட்சிக்கும் நீர் நான் செய்த பிழையைப் பொறுத்துக் கொள்ளும். என்னைச் சோதனைக்குள் உட்படுத்தாமல் இரட்சித்துக் கொள்ளும்— ஆமென்.''

''உனக்காகப் பிரார்த்தனை செய்தாயா அன்றி றிக்சாக்காரனுக்காகப் பிரார்த்தித்தாயா?''

''எல்லாம் வல்ல யேசுவே, ஏழை றிக்சாக்காரனது றிக்சாவைக் காத்து அவனுக்குத் துன்பம் வராமல் காத்துக்கொள்ளும்.''

மெல்ல மெல்லக் கண்கள் மூடின. சிந்தனைக்கு ஓர் முற்றுப் புள்ளி.

∴ ∴ ∴

**கா**லை வழக்கம்போல் தேனீர் அருந்தச்சென்ருன் ராஜு.

ரெயில்வே கடவையில் சிறு கூட்டம்.

''ஆண்டவனே உனது திருவிளையாடல் என்னவோ?''

அருகில் சென்ருன்.

"என்னங்க ஐயா நான் செய்யிறது. ஆண்டவன் இப்படி எனக்கு செஞ்சிட்டாரு. கெட்டபசங்க நான் தூங்கக்க மெல்ல இதை எடுத்துகிட்டு வந்து செஞ்ச வேலைதான் இது. இன்னைக்கு நானு எப்படிங்க

பொழைப்பேன்?'' —தமிழ் றிக்சாக் காரனின் உடைந்த உள்ளத்தினின்றும் வந்த வார்த்தைகள்.

கால்களில் டச்சுக்காலத்திய சப்பாத்துக்கள். கிழிந்த சாரம். பெனியன். தலையில் ஓர் தொப்பியுடன் காட்சியளித்த றிக்சாக்காரனை யடுத்து ஐந்தாறு தமிழ்க் கூலிகள். கொழும்புத் துறைமுகத்தில் வேலை செய்பவர்கள்.

றிக்சாவினை ராஜு நோக்கினான், பிடித்திழுக்கும கைப்பிடிக் கம்பிரண்டும் உடைந்திருந்தன.

"திருத்துவதற்கு குறைந்தது பத்து ரூபாவாகிலும் செலவாகும்"— ராஜுவின் எண்ணம்.

கால்ச்சட்டைப் பைக்குள் தானாக வலது கை விரைந்தது. சாப்பிடவைத்திருந்த பத்து ரூபா நோட்டு அகப்பட்டது.

''இழுத்துக்கிட்டு வந்தவங்களை நான் புடிச்சிருந்தேன்னா முதுகுத் தோலை உரிச்சிருப்பேன்''—ஒரு கூலியாளின் ஆவேசவார்த்தைகள்.

"ரூஸ்களுங்க, பொலீஸிலே மாட்டிக்காம விட்டிட்டாங்க"— வேறு ஒருவனின் பகர்தல்.

"பத்து ரூபாவைக் கொடுத்தியோ வீணே மாட்டுப்பட்டுக் கொள்வாய். என் கொடுத்தாய் எனக் கேட்பார்கள். அதிலிருந்தும் வினாக்கள் வளர்ந்தால் கடைசியில் பத்து ரூபாவினை அளிப்பதுடன் முதுகும் வீங்க நேரிடும்''— சிந்தித்தான் ராஜு.

எடுத்த பத்து ரூபாவைக் கை பழையபடி பைக்குள்ளேயே வைத்தது. கால்கள் சாப்பாட்டுக்கடையை நோக்கிவிரைந்தன.

''ஆண்டவனே இவ்வளவுடன் காப்பாற்றினதே போதும்.'' இறைவனை நினைத்துக்கொண்டான்.

உள்ளத்தில் இரக்கமுண்டு. ஆனால்செயலில் செய்துகாட்டினால்?




# முறுவலும் பஞ்சமாச்சோ!

-எருவில்மூர்த்தி-

நிலவினைப் படைத்தால் பாட்டில்
நித்திலச் சுடரைச் சிந்தும்!
மலரினைச் சொன்னல் நல்ல
மணமொடு தீந்தேன் நல்கும்!
புலரியின் அழகைச் சொன்னல்
புதுவிதத் தெம்பை ஊட்டும்!
சிலரினைப் புகழ்ந்தால் பாட்டில்
செல்வமும் பரிசாய்க்கிட்டும்.

ஆற்றினைச் சொன்னல் பாட்டில்
அருந்திடத் தண்ணீர் நல்கும்!
சேற்றையும் புகழ்ந்தால் செந்நெல்
செழித்திடச் செய்யும்; தென்றல்
காற்றினைக் கவிதை சொன்னல்
களைப்பினை அகற்றும்; கன்னற்
சாற்றினை நல்கும் அந்தக்
கனிகளைக் கவிதை சொன்னல்!

விழிகளை, இதழை, உந்தன்
மேனியின் பொலிவை, கொங்கை
நெளிவினை, நீண்ட கூந்தல்
நேர்த்தியை, இடையை, கன்னக்
குழிகளை மொழிந்து பாட்டிற்
கொண்டதென்? அன்பே, மெச்சி
மொழியிலை...! எனினும், சின்ன
முறுவலும் பஞ்சமாச்சோ!

நாடக விமர்சனம்:

# பிணம் பேசுகிறது!

சாவகச்சேரி தெய்வேந்திரா தியேட்டரில் சென்ற 30–9–63ல் அரங்கேறிய நாடகத்தின் பெயர் பிணம் பேசுகிறது! ஏழை-பணக்காரன் மோதலைக்கொண்ட சுமாரான கதையாக இருந்தபோதிலும், வசனம் சில இடங்களில்சோபித்தது. ஏழைப் பெண்ணுக நடித்த கமலாவும் பணக்காரனுக நடித்த ஐ. சண்முகநாதனும் பாத்திரங்களை உணர்ந்து நடிக்க முயன்றனர். ஏழை வீரய்யனின் (ஈழத்துச் சிவானந்தன்) நடிப்பு, சபையோரைக் கண்கலங்க வைத்தது. என்ருலும், மயானக் காட்சியில் அழுத அழுகையைக் குறைத்திருக்கலாம். வில்லனுக வந்த க. செல்வரத்தினம் சில இடங்களில் போட்ட அட்டகாசம் சபையை அதிர வைத்தது. எதையும் கொஞ்சம் மட்டுப்படுத்த வேண்டாமோ? பாராளுமன்ற உறுப்பினர் திரு. வ. ந. நவரத்தினம், பிச்சைக்காரக் கோலத்தில் தோன்றி 'சபாஷ்' பெற்றதோடு சபையினரிடமிருந்து சில்லறைகளையும் பெற்ருர். குழந்தை கிஷோரின் நடிப்பு, சபைக்கு விருந்தாயிருந்தது. நாடகத்திற்குப் பொறுப்பாகவிருந்த திரு. சு. செல்வரத்தினம், திரு. க. செல்வரத்தினம் ஆகியோரைப் பாராட்டுவதில் தவறில்லை.

—கசிவன்

# எழுதிச்......

இந்தக் கலையுலகம் தான் எப்படிப்பட்டது!

எங்கேயோ இருக்கிற ஒரு ரசிகரையும், பேனவைப் பிடித்திருக்கிற ஒரு 'பூலோக பிரம்மா' வையும் அபூர்வமாக - நூற்றில் ஒன்று என்று சொல்லும்படியாக— ஒன்ருக இணைத்து விடுகிறதே!

நானும் 'எழுத்துல'கில் சஞ்சரிப்பவன் என்பதைக் கெட்டிக்காரத்தனமாகத் தெரிந்துகொண்ட ஒரு ரசிகர், ஒரு மாதத்திற்கு முன்பு, ஒரு அறிமுக அஞ்சலை எனக்கனுப்பி வைத்திருந்தார்.

பார்த்தேன்., இயற்கையன்னையின் ஆதரவு பெற்ற எழில் மிகுந்த கண்டிமா நகரத்திலிருந்து அது வந்திருந்தது.

ரசிகர் நாராயணனுக்கும் எனக்குமிடையில் இப்படித் துவங்கிய 'கலைப்பித்து' கொண்ட நட்பு மிகவும் நெருங்கியதாயிற்று என்று சொல்வதற்கில்லை. ஒரு மாத காலத்தில் அது அரும்பிலே தான் இருக்கும், அப்படித்தான் இருக்கவும் செய்தது.

ஆனல் நண்பர் தினமும் கடிதம் எழுதினர். என் சில சிருட்டிகளைப் புகழ்ந்திருந்தார். 'புகழ்மாலை' எழுத்தாளனுக்கு 'வசிய மருந்' தல்லவா! அவர் வலையில் வீழ்ந்தேன். சளைக்காமல் நானும் கடிதம் எழுதினேன். வருங்கடிதங்களில் எல்லாம் ஒன்று மட்டும் தவருமல் குறிப்பிடப் பட்டிருக்கும்.

'கண்டிக்குக் கட்டாயம் ஒரு முறை வாருங்கள்; எங்கள் ஊரைச் சுற்றி ஒய்யாரமாக பவனி போகும் மகாவலி கங்கையையும் பேராதனையிலுள்ள 'உலகப் பூந்தோட்டத்தை'யும் அங்குள்ள தொங்கும் ஊஞ்சலையும் கண்ணுரக் காண வேண்டாமா? வாருங்கள், வாருங்கள்' - என்று.

இரண்டொரு தினங்களுக்கு முன்பு நான் மன நிம்மதியற்றிருந்த சமயத்தில் இதைப்பற்றிய எண்ணம் வந்ததும், அப்படிச் செய்தாலென்ன என்று தோன்றிற்று. அன்றே நண்பருக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுவைத்தேன். 'மனத்தில் ஏனே நிம்மதியில்லை, ஞாயிறு அங்கு வருகிறேன். இரண்டே நாள் தான் தங்குவேன், சம்மதமா?'

'சம்மதம்! என் மனத்திலும் தான் அறவே நிம்மதியில்லை. தங்களால் அது தீர்ந்தால் நல்லது. உடனே புறப்பட்டாலும் நன்று'- என்று இம்முறை கடிதம் வரவில்லை. தந்தியே வந்தது.

கிழக்கு நாடுகளின்மரகதத்தீவு என்ற எங்களது ஈழ நாட்டின் எழில் முழுவதையும் அம்பலமாக்குவது கண்டிமா நகர் ஒன்றுதான். பிறகு தான் மற்றவை. ஒரு காலத்தில் பல்லவ மன்னர்களின் உற்ற துணைவனுக இருந்த மானவன்மன் இருந்த நாடல்லவா அது! கலைகளுக்கும் குறைவில்லை., காட்சிகளுக்கும் பஞ்சமில்லை.

கண்டியை நான் பலமுறை தரிசித்திருக்கிறேன். தலதா மாளி

கையில் உள்ள புத்தர் பிரானது புனிதப் பற்களை, எல்லாச் சமயங்களிலும் தரிசிக்க முடியாதே என்று 'புத்த ஜெயந்தி' கொண்டாடப்பட்ட சமயம் ஓரிரவிலேயே ஓடிப்போய்ப் பார்த்துவிட்டுக் குளிர் தாங்க முடியாமல் ஓடி வந்ததும் உண்டு.

ஆனால் நான் போகும் சமயங்களில் எல்லாம் என் உள்ளத்தைக் கொள்ளைகொண்டு விடுவாள் ஒருத்தி! அவள் தான் மகாவலி கங்கை!

கண்டிமா நகரில் நுழைவதற்கு முன்பே இவளைத் தரிசித்துவிடலாம. பிறகு நாம் கண்டியின் சுற்றுப் புறங்களுக்குப் போகும் போதெல்லாம் இவளும் கூடவே வருவாள், நெளிந்து, வளைந்து, 'தெளிந்து' அவள் செல்லும் அழகை ஒரு சாதாரண எழுத்தாளன் வர்ணிப்பது அழகேயல்ல!

நண்பரும் நானும் முதன் முதலாக ரயில் நிலையத்தில் சந்தித்துக் கொண்டோம். ஆபாரம், வேட்டி, கையில் ஒரு புத்தகம், இவை 'எழுத்தாளர் சின்னம்' என்பதை எந்த ரசிகர்தான் தெரிய முடியாது!

நண்பரைக் கவனித்தேன் அவர் உற்சாகமாய் இருப்பதாகத் தெரியவில்லை. முகம் வாடியிருந்தது., உடல் சோர்ந்திருந்தது; எனக்கேயுரிய சில நகைச்சுவைகளை அள்ளி வீசினேன். சிரிக்கத்தான் செய்தார்; ஆனால் அதில் ஜீவனேயில்லை.

ஏதாவது பேச வேண்டுமென்பதற்காக, "ஆமாம்! மகாவலி கங்கை எப்படியிருக்கிறாள்?" - என்று கேட்டேன்,

"அவளுக்கென்ன... ஒவ்வொருவராகப் பார்த்து விழுங்கிக்கொண்டேயிருக்கிறாள்... தண்ணீர் இப்போது தெளிவில்லை; கலங்கிக் கிடக்கின்றது!" – என்று நண்பர் பதில் கொடுத்தார் சுவாரஸ்யமில்லாமல்!

"என்னவோ சொன்னீர்களே, விழுங்கியோ, ஏதோவென்று... அது என்ன...?" – கேள்வியைக் கேட்டேன் நான்.

அதே சுவாரஸ்யமில்லாத தொனியில், "அது போகட்டும் சார்... முதலில் ஏறுங்கள் பஸ்ஸிலே... இல்லம் போவோம்... பிறகு கலையுலகைப்பற்றிப் பேசுவோம்!" என்றார்.

நான் கப்சிப்!

நண்பரது இல்லம் கண்டியிலிருந்து இரண்டொரு மைல்களுக்கப்பால் உள்ள கட்டுகாஸ்தொட்டை என்ற இடத்திலுள்ளது குக்கிராமம் என்று இதற்குப் பெயர், ஆனால் ஒரு 'குட்டி நகரம்' இது!

பஸ்போய்க்கொண்டிருந்தது... நான் ஏதோ உளறிக் கொட்டிக் கொண்டிருந்தேன்... நண்பர், உம்மென்று கேட்டுக் கொண்டே வந்தார்.

பஸ், கண்டியின் ஒரு பிரபலமான தெருவில் நுழைந்து பிறகு ஒரு குகை வாயிலைக்கடந்து ஏகாந்தமான ரோட்டில் பிரவேசித்தது.

......செல்லும்

# ......விதியின் கை

ஆஹா!... அதோ... மகாவலி கங்கை பிரவாகமெடுத்து ஓடுகிருள்...

பஸ் ஒரு பெரிய பாலத்தைக் கடக்கும்போது மகாவலிகங்கை என்ற மங்கையின் முழு சௌந்தர்யத்தையும் காணமுடிந்தது. இருமருங்கிலும் பச்சைப் பசேலென்று மரம் செடி கொடிகள்... நடுவிலே மகாவலி எந்தச் சலனமுமில்லாமல் ஓடுகிருள்... கரையில் அங்குமிங்குமாக ஆண் பெண் இருபாலாரும் துணிகள் துவைக்கவும் குளிக்கவுமாகக் காட்சி தருகிருர்கள். யானைக் கூட்டம் ஓர் இடத்தில் நீராடுகின்றது... ஆடுமாடும் ஓர் இடத்தில்... இரம்மியமான காட்சிகள்தான்...

"என்ன, எழுத்தாளர் சார்... அந்த மகாவலி மங்கையின் அழகிலேயே சொக்கிநிற்கிறீர்களே...அவளைக் காதலித்துவிடாதீர்கள்... காதல் அவளுக்குப் பிடிக்காது... திரும்புங்கள்!"

திரும்பினேன்!

"இல்லை ரசிகரே... வெகுநாட்களுக்குப்பிறகு காண்கின்றேனல்லவா... அதுதான்"

"சரி, சரி, அதை விடுங்கள்... இதோ நாம் இறங்கும் இடம்... இறங்குங்கள்!"

"இதோ..."

∴ ∴ ∴

நண்பகலில் நல்லதொரு விருந்து. ரசிகர் 'தனித்த கட்டை' யாகஇருந்தாலும் சாப்பாட்டு விஷயத்தில் ஒரு குறையும் வைக்கவில்லை. அவர், அரசாங்க ஊழியர் என்பதனுல் ஏவலுக்கு எத்தனையோ பேர் இருந்தார்கள்.

சாப்பாட்டை முடித்துவிட்டு ரசிகரும் நானும் பின்புறம் கையலம்பச் சென்ருேம். பின்புறம் மரம் செடி கொடிகளடர்ந்த பெரியதொரு விசாலமான இடமாக இருந்தது. இடையில் இவர் இல்லத்தையும் மற்றவர்களது இல்லங்களையும் பிரிப்பதுபோல நீண்டு போய்க்கொண்டிருந்தது ஒரு குறுக்குச் சுவர்.

நான் நகைச்சுவைக்காக கேட்டேன். "என்ன இந்த இடம் நேராக மாத்தளைக்கே போகிறதோ?"

"இல்லை சார்,கடைசிகாலத்தில் கைலாசத்திற்குப் போகிற வழி!"

திடுக்கிட்டுப்போனேன் நான்.

"என்ன... நீங்களும் பரிகாசம் பண்ணுகிறீர்களா?"

"இல்லை... இல்லை... உண்மையாகத்தான்... அது ஒரு மயானம். பிரேத தகனத்துக்குரிய இடம்!—" அவர் குரல் ஏனே தழதழத்தது. பெரிய பெருமூச்சு விட்டார்.

"நண்பரே... இங்கே தான்... இங்கே தான்..."- அவரால், மேற்கொண்டும் சொல்ல முடியவில்லையோ என்னவோ... அவர் கண்களிலிருந்து கண்ணீர் பெருகிற்று. அவரது நடுங்கிய கரங்களைப் பற்றிய என் கரங்களிலும் இரணடொரு

கண்ணீர் துளிகள் விழுந்து நெருப்பு போல் சுட்டன.

“திடீரென்று என்ன நண்பரே, எந்த சமயத்திலும் மனிதர் உணர்ச்சியை இழக்கக் கூடாது. வாருங்கள் உள்ளே”— நான் அவரைத் தாங்கியவண்ணம் நடுக் கூடத்திற்கு அழைத்துச்சென்று உட்கார வைத்து ஆசுவாசப்படுத்தினேன்.

“இப்பொழுது சொல்லுங்கள்... ‘இங்கேதான்’ என்கிறீர்கள்...என்ன அங்கே... சொல்லுங்கள்”

“நண்பரே, நான் எதிலும் பற்றுக் கொள்ளாதது போல் ஒரு மாதிரியாக இருந்ததை நீங்கள் கவனித்திருப்பீர்கள். உண்மையில் என் மன நிம்மதி முற்றாகக் குலைந்து விட்டது...!”— அவர் சொல்ல ஆரம்பிக்கிறார் போலிருந்தது.

“ஆமாம்... நானும் யூகித்தேன்... எனக்குத்தான் நிம்மதியில்லை என்றால் தங்களுக்கும் அப்படியா என்று வியக்கவே செய்தேன்”

“ஆம் நண்பரே... என் நிம்மதியின்மையை என் புது நண்பராவது மாற்றமாட்டாரா என்றுதான் தங்களை உடனடியாக வரும்படி தந்தி சொன்னேன். கடைசியில் வந்தீர்கள். ஆனால்...?”

“அய்யோ, என்ன ஆனால்? என்னால் எதுவும் நேர்ந்து விட்டதா?”

“அப்படித்தான்... உண்மையைச் சொல்கிறேனே... என் மன நிம்மதி தங்களால் அதிகம் சீர்குலைந்தது!”

“அட ஈஸ்வரா!”

“எந்த மகாவலி கங்கையையும் எந்த மயானத்தையும் நான்முற்றாக மறந்துவிட விரும்பினேனோ அவ்வளவுக்கு அதை நீங்கள் எனக்கு நினைப்பூட்டினீர்கள். திரும்பத்திரும்ப மகாவலிகங்கையைப்பற்றிப் பேசினீர்கள். கடைசியில் மயானத்தைப் பற்றியும்...”

“அய்யோ... நான் இப்படிப் பட்ட தவறுகள் செய்வேன் என்று நினைக்கவேயில்லை!”— நான் அவரது கரங்களைப் பற்றிக்கொண்டு சொன்னேன் இதை!

“நண்பரே, தாங்கள் சொன்னவை தற்செயலானவை தான்...”

“அப்படியே நம்புங்கள்”

“ஆனால் அது எவ்வளவுக்கு என் மன நிம்மதியைக் குலைத்துவிட்டது பாருங்கள். உண்மையில் யாரிடமும் நீங்கள் மகாவலிகங்கையைப் பற்றியும் மயானத்தைப்பற்றியும் பேசியிருந்தால் தங்களை விரும்பியிருக்கவே மாட்டார்கள். ஆனால் நான் அப்படி செய்யவே மாட்டேன்!”

“அய்யோ... என்னிடமிருந்த கொஞ்சநஞ்ச நிம்மதியையும் இப்பொழுது நீங்கள் குலைத்து விட்டீர்கள்! ஏன் அப்படி...? ஏன் அப்படி? நீங்கள் சொல்லித்தானாகவேண்டும்.”

“சொல்கிறேன்... நீங்கள் பத்திரிகையைப் பார்ப்பவராயிருந்தால் சுமார் மூன்று நான்கு நாட்களுக்கு முன்பு ஒரு செய்தியைப் படித்திருப்பீர்கள்......மகாவலி கங்கையில் ஓரிடத்தில் குளித்துக்கொண்டிருந்த மூன்று பருவப் பெண்கள்......!”- திரும்பவும் அவர் கண்களில் கண்ணீர்., குரல் கம்மிக் கொண்டுபோ

எம். எம். மக்கீன்

யிற்று. நான் சாந்தப்படுத்திப் பேச வைத்தேன்.

"...மூன்று பருவப் பெண்கள், ஒரு குழந்தையைக் காப்பாற்றச் சென்று ஆற்றுக்குப் பலியான ......!''

''ஆமாம், ஆமாம்......, லேசாக நினைவில் வருகிறது...... அப்படி ஒரு செய்தி படித்தேன். மூன்று சகோதரிகளாம், ஒரு பணிப்பெண்ணும். எல்லாரும் குளிக்கச்சென்ற போது மூத்த சகோதரியின் குழந்தை தண்ணீரில் விழவும் மற்ற இரு சகோதரிகளும் பணிப்பெண்ணும் ஒருவர் பின் ஒருவராக காப்பாற்றச் சென்று உயிர் துறந்த கதை தானே......எனக்கு அப்பவே மறந்து விட்டது!"

''ஆ, உங்களுக்கு என்ன? அது ஒரு பொழுது போக்கும் செய்தி தானே... ஆனல் கிட்ட இருக்கும் எங்களுக்கு? இன்னும் ஜனங்கள் அதைத்தான் பேசிக் கொண்டிருக்கிருர்கள்!"

''உண்மை தான் நண்பரே, துயரக் கதை தான் அது...''

''அய்யோ, பரிதாபம்! அவ்வளவு பேரும் அழகிய பருவப் பெண்கள் சார்... யாரால்தான் அதை மறக்க முடியும்? இல்லே, இந்த மகாவலி கங்கையைத்தான் மறக்க முடியுமா? மகாவலி கங்கை மாபாவிசார், மாபாவி!''—அவர் சிறு குழந்தையைப் போல அழுதது என் உள்ளத்தைத் தொட்டது. பிறரது துயரத்தைத் தானும் பங்கு போட்டுக் கொள்கிற அதிசய மனிதராகவல்லவோ இருக்கிருர் இவர்!

''உண்மையிலே துயரம் தரும் முடிவு தான்! அதுவும் அறிமுகமானவர்கள் என்ருல் கேட்க வேண்டியதில்லே, பிரிவை சகிக்க முடியாது., நிம்மதி நாசமாகிவிடும். எல்லாம் சரி, என்னேடு கொஞ்ச நாள் கொழும்பு வந்து இருங்களேன், எல்லாம் சரியாய்ப் போய் விடுகிறது!''

''சரிதான் போங்கள்...... நானே எப்பவோ இதைவிட்டு தொலேதூரம் ஓடிவிடமுடிவு செய்து விட்டேன். ஆனல், நான் ஒரு அரசாங்க ஊழியன். அரசாங்கம் மனது வைக்கவேண்டும், என்னே இங்கிருந்து மாற்ற! அது தான் தொல்லே இப்போது......!"

அய்யோ பாவம்! மனிதர்களுக்குத் தான் கடவுள் எத்தனே சிக்கல்களேக் கொடுத்து வைக்கிருர்.

நான் எழும்பி அவர் தோளேத் தட்டி, ''பரவாயில்லே. இதற்கு ஒரே மருந்து இதைச் சிறுகச் சிறுக மறப்பதுதான்! நானும் இனி மகாவலி கங்கையை ஏறிட்டும் பார்க்கப் போவதில்லே. எழும்புங்கள், சிறிது கண்ணயர்ந்துவிட்டு பேராதனே பூந்தோட்டம் செல்வோம்!''

''உம்...சரி...!"

∴ ∴ ∴

ரசிகரும் நானும் பேராதனேப் பூந்தோட்டத்தை ஒரு சுற்று சுற்றி வந்தோம். எத்தனேயோ நூற்ருண்டுகளுக்கு முன்பு வெள்ளேயர்கள் கொண்டு வைத்த உலகத்து மரங்களத்தனேயையும், புஷ்ப வகைகளேயும் இங்கே ஒரு மிக்ககாணும் போது வாழ்நாள் முழுவதும் இங்

கேயே இருந்து விடலாமா என்று சபலம் தட்டுவது இயற்கை.

இங்கே என் ரசிகர் இரண்டு இடங்களில் மிக விசித்திரமாக நடந்து கொண்டார். நல்ல மனிதர் இவர்!

''லவர்ஸ் ரெஸ்ட்'' என்றோர் இடம் இங்கே. இனிய தமிழில் அழகாகச் சொல்வதுஎன்றால்''காதலர்களின் ஏகாந்த சுவர்க்கம்'' என்று சொல்லலாம்.

இந்த இடத்திற்கு நானும் ரசிகரும் வந்தபோது ஏதோ புலியையோ சிங்கத்தையோ பார்த்து நடுங்குவதுபோல ரசிகர் கத்தினர்

'அங்கே போகாதீர்கள்!அங்கே போகாதீர்கள்! அது நமக்கு உகந்த இடமல்ல! காதலில் கரை கண்டவர்களுக்குத்தான் அந்த இடம் திரும்புங்கள்!'' - என்று!

ரசிகரின் மனப்போக்கை எண்ணி வியந்தவாறு அவரைக் கூட்டிக்கொண்டு "தொங்கும் ஊஞ்சல்'' பக்கம் போய்ச்சேர்ந்தேன். அவ்வளவு தான்! மார்கழி மாதக் குளிரில் நடுங்குவதுபோல நடுங்கிக் கொண்டு சொன்னார், 'எனக்கென்னவோ இந்தத் தொங்கும் ஊஞ்சலில் ஏறவே பயமாயிருக்கிறது. இரண்டு அடி எடுத்து வைத்தவுடனேயே அது ஆடுகிற ஆட்டம்! அப்பப்பா! அதுவும் கீழேபயங்கர வேகத்தில் ஓடும்மகாவலிகங்கையைப் பார்க்கும் போது......? அய்யோ! நினைக்கவே முடியவில்லை. வேண்டாம் சார்! வேண்டாம்! நீங்கள் போய் வாருங்கள்!"

நான் எவ்வளவோ மன்றாடிப் பார்த்தேன்.

''இவ்வளவு தூரம் வந்துவிட்டு தொங்கும் ஊஞ்சலில் ஏறாவிட்டால் வெட்கக்கேடு'' என்று வேறு சொன்னேன்! உஉஹும்! அவர் அசையவில்லை. நானும் கடைசியில் ஏறாமலேயே வரவேண்டியதாயிற்று.

ஒரு வழியாக பூந்தோட்ட வாசலை வந்தடைந்தோம். எதிரே இலங்கை சர்வகலாசாலை கண்ணுக்குத் தெரிந்தது. கூடவே ஒளி விளக்குகள் கண் சிமிட்டின. மணி ஆறுக்கு மேல் ஆகிவிட்டது என்று புரிந்து கொண்டோம்.

'எங்களுடைய பஸ்' – அதாவது மக்கள் அரசாங்கத்தின் சொத்தாக இருக்கும் பஸ் எங்களை ஏற்றிக் கொண்டு கட்டுகாஸ் தொட்டையை நோக்கி அன்ன நடை பழகியது.

வழக்கமாக கொழும்பில் இரவு பத்து மணிக்கும் பதினொரு மணிக்கும் படுத்துறங்கும் எனக்கு இங்கு ஒன்பது மணிக்கே தூக்கம் கண்களைச் சுழற்றியது. லேசான குளிர் காற்று வேறு: இன்பமான நித்திரை வரும் போலிருந்தது. ரசிகர் முன்வாசலிலும் நான் உள் அறையிலுமாக உடலைக் கிடத்தினோம். சுகமான நித்திரைதான்: கொழும்பில் இப்படி நித்திரை வருவது அருமையிலும் அருமை,

∴ ∴ ∴

கலீர்!

'அடடா... இந்த நட்ட நடுநிசியில் நான் ஏன் விழித்துக் கொண்டேன்...? யாரோ சிரிப்பது போல...?'

'ஹ் ஹா ஹா...என்ன எழுத்தாளப் பிரம்மாவே, நான் நிற்பது தெரியவில்லை...? இங்கே...இங்கே பாரும்...!'

'அட...! ஒரு பெண்...!'

'ஆம்! நான் தான் அவள்! மகாவலி கங்கை 'விழுங்கிய' பரிமளம்! குடும்பத்தில் இரண்டாமவள்!'

'ஐயோ...நீ.. யா...?;

'ஹ்ஹாஹா...ஏன் பயந்து சாகிறீர்...? சாக வேண்டாம்! இப்போதைக்கு இங்கே இடமில்லே! எழுத்தாளர்களுக்கு நெஞ்சம் இரும்பாக இருக்கவேண்டும் தெரியுமா உமக்கு?'

'தெ...ரி...யு...ம்!'

'பிறகு என்ன...? என் கதை ஒன்று சொல்வேன் கேட்பீரா...?'

'சொல்லம்மா!'

'ஹ்ஹாஹா...அம்மாவாக ஆக்கி விட்டீரே...கடவுள் என்னைக் காப்பாற்றட்டும். என்னுடையது சோகக்கதை தான்...அதைப்பற்றி ஒன்றும் இல்லேயே...?'

'இல்லே...!'

'நான், என் தங்கை பங்கஜம் எங்கள் வேலேக்காரி மூவரும் இறந்ததாகத் தானே பத்திரிகைகள் சொல்லுகின்றன...உமது அருமை ரசிகருங் கூட...?'

'ஆமாம்... அவர் நிறையச் சொன்னுர்...நிறைய அழுதார், உங்கள் முடிவை எண்ணி!'

'மிக்க நன்றி என்று சொல்லுங்கள் அவரிடம்! இனி நான் கதையைச் சொல்லட்டுமா?

'எதை...? உங்கள் கதை தானே...? தெரிந்தவைதானே ... பத்திரிகையில்...?'

'ஆமாம்...ஆனுல் பத்திரிகையால் இதய ஆழத்திலிருக்கும் உண்மையை வெளியிட்டுவிட முடியுமா...?'

'என்ன...!'

'கேளும் கதையை...என் மூத்த சகோதரியின் குழந்தை தவறி தண்ணீரில் விழ, அதைக்காப்பாற்ற நான், என்தங்கை, வேலேக்காரப் பெண் மூவரும் ஒருவர் பின் ஒருவராக காபபாற்றச் சென்று உயிர் விட்டதாகத்தானே செய்தி..?'

'ஆமாம்...குழந்தையும் தாயும் அதிர்ஷ்ட வசமாகத் தப்பினர்!'

'அட! குழந்தை தப்பிவிட்டானு...நல்ல குழந்தை அவன்! சுகமேயிருப்பானல்லவா?

'இருக்கலாம்!'

'அது போதும்...கேளும், நடந்தது அப்படியில்லே...நான் செய்த சதி அது!'

'ஐயய்யோ...!'

'ஏன் பதட்டம்...? நீரும் ஒரு பெண்ணுக இருந்திருந்தால் அப்படித்தான் செய்யத் துணிந்திருப்பீர்...!'

'எப்படி?'

'எனக்கொரு காதலன்...என் அன்பையெல்லாம் அள்ளிச் சொரிந்தேன். அதற்கு முட்டுக்கட்டையாக முளேத்தாள் என் தங்கை பங்கஜம்! எந்த உள்ளம் தான் சமாதானப்படும்? ஒரு நாள்...பேராதனேப் பூந்தோட்டத்தில் 'காதலர் ஏகாந்தத்'தில் நான் என் அன்பரோடு இருந்த அதேயிடத்தில் என் சகோதரி இருக்கக் கண்டேன்...எந்த மனந்தான் பொறுக்கும்?'

'ச்சு...ச்சு...,

'அடுத்த நாளே என் காதலனேக் கண்டேன்...' தொங்கும் ஊஞ்சல்' கிடு கிடுவென்று நடுங்கியது! நான் பயந்தேனு, இல்லவே இல்லே. நான் சீறி விழு

தேன்...! என் தங்கைதான் அவரோடு தகாத முறையில் நடந்து கொண்டாளாம்—அவர் என்னை சமாதானப்படுத்தினர். என் தங்கை எனக்கே வைரியாவதை உணர்ந்தேன். என்னைவிட அழகுபடைத்த அவள் என் அன்பனை அபகரித்து விடுவாள் என்ற எண்ணம் மேலோங்கியது... அவளைத் தொலைத்துவிட முடிவுகட்டினேன்.!

'ச்சு... ச்சு...'

'சமயம் வந்தது... நான், என் மூத்ததமக்கை, அவள் குழந்தை, என் தங்கை, வேலைக்காரி எல்லோருமாக வழக்கம்போல நீராடச் சென்றோம்... நல்லநேரம் பார்த்தேன்.. நீரில் செல்லமாக குழந்தை விளையாடிக் கொண்டிருந்த சமயம் நானே நீர்ச் சுழியில் பிடித்துத் தள்ளினேன்...!! எனக்கு நன்றாகத்தெரியும்... என் தங்கை காப்பாற்றச் செல்வாள் என்று! நினைத்தது நடந்தது! அவள் விழுந்தாள்... ஆனால்... அய்யகோ... நான் நினைக்காத ஒன்றும் நடந்தது...! அவளைக்காப்பாற்ற வேலைக்காரி விழுந்தாள், குழந்தையைக் காப்பாற்ற தமக்கை விழுந்தாள்...!'

'ச்சு ச்சு'

'என் ரத்தம் அப்பொழுது தான் கொதித்தெழுந்தது! உன் உடன் பிறந்த ஒவ்வொருவரும் செத்து மடிய நீ மட்டும் வாழ்வதா? உன்னால்தான் அது முடியுமா? காதல் என்ன காதல்! உன் காதலுக்கு குழந்தை என்ன இடையூறுசெய்தது...? நீ சும்மாயிருந்தாலும் உன் உடன்பிறந்த ரத்தம் சும்மாயிராது—என்று ஆயிரம்பேர் சேர்ந்து கூக்குரலிடுவது போலிருந்தது. கண நேரந்தான்! காதலைமறந்தேன்... காதலனை மறந்தேன்... என் உடன்பிறந்தபாசம் என்னைத் தண்ணீரில் பிடித்துத் தள்ளிற்று......நானும் இறந்தேன்....'

'ச்சு...ச்சு...'

'ஆனால்... இன்று, நான் காதலித்தவனை நினைத்தால்...? அவருக்கு இந்த உண்மையை யார் சொல்வார்? தேடினேன் ... தேடினேன்... நீர் வந்து அகப்பட்டீர்... இந்த உண்மைகளை நீர் சொல்லிவிடுவீரா...?'

'மிகப்பெரிய பொறுப்பு! உங்கள் அன்பரை எனக்குத் தெரியாதே...!'

'ஏன் பொய்சொல்கிறீர்? உம் ரசிகர் தான் என் ஆருயிர் அன்பர்...!'

'ஆ...!'

கலீர்!


சிரிப்பொலி மறைந்தது. பேயறைந்ததுபோல் இருந்தேன் நான்! விடியும்வரை காத்திருந்தேன். ஓடினேன் ரசிகர் அறை நோக்கி!

அங்கே......

ரசிகரின் வெறும் சவத்தைத் தான் கண்டேன். ஆவி, ஆவியுருவில் வந்தவருடன் ஓடிவிட்டதா?

கிட்ட ஒருதுண்டு கடிதம் இருந்தது.

"என்ன உலகம் இது... இன்றிரவு இப்படி நரக வேதனைப்படுவேன் என்று நினைக்கவேயில்லை. நான் சற்றும் அன்புசெலுத்தாத இருவர் இன்று இறந்துவிட்டார்கள் என்றபிறகு, அவர்களின்மேல் காரணமில்லா அன்பும் பாசமும் பரிவும் என் இதயத்தில் ஏற்பட்டு என் நிம்மதியும் சந்தோஷமும் நரகமாவதா? உலகம் இத்தனை கொடிய நரகத்தை எனக்கு அளிப்பதாயிருந்தால் இங்கு ஏன் இருக்கவேண்டும்? இறப்பு ஒன்றே நிரந்தர நிம்மதியைத்தராதா? எழுத்தாளரே, என் அபிமானம்மிக்கவரே, இதை உலகம் அறியச்செய்யும் பொறுப்பு உம்முடையது!"




**சிந்திய துளிகள்:** கொழும்பில் உத்தியோகம் பார்க்கும் கண்ணன் தன் மாமன் மகள் ராதாவைக் காதலிக்கிறான். ஆனால் இரண்டு குடும்பத்தினரும் உறவை மறந்து, பிரிந்து இருந்தபடியால், அவர்களின் காதல்வாழ்விற்கு இடையூறு ஏற்படுகின்றது. ராதாவின் தந்தை வேலாயுதம் பிள்ளை, சாதியிற்குறைந்த ஒரு பெண்ணை விவாகஞ்செய்துவிட்டார் என்ற காரணத்தால் கண்ணனின் தந்தை நடராசர் அவரை ஒதுக்கி வைத்திருந்தார். கண்ணன்—ராதா தொடர்பையறிந்த நடராசர் கொதித்தெழுகின்றார். ராதாவை மறந்துவிடும்படி மகனிடம் கண்டிப்பாகத் தெரிவிக்கின்றார். காதலின் அருமையை உணர்ந்த வேலாயுதம்பிள்ளை தன் மகளின் உணர்ச்சிக்கு மதிப்புக்கொடுத்து, அவளுடைய விருப்பத்தை நிறைவேற்ற முயல்கிறார். கொழும்பில் கண்ணன் தங்கியிருந்த வீட்டின் உரிமையாளரான கனகலிங்கத்தின் உதவியை நாடுகின்றார் வேலாயுதம். தந்தையை எதிர்க்கவும் துணிவில்லாது, ராதாவை மறக்கவும் மனமில்லாது உணர்ச்சிச் சுழியுள் அகப்பட்டுத் தத்தளிக்கின்றான் கண்ணன். அந்தச் சமயத்தில், வேலாயுதம் தனக்கெழுதிய கடிதமொன்றைக் கண்ணனிடம் காட்டுகின்றார் கனகலிங்கம். கண்ணன்—ராதா. இருவரையும் இணைத்துவைக்கத் தான் எடுத்த முயற்சிகள் முழுவதும் தோல்வியடைந்ததைக் குறிப்பிட்டு, ராதாவை வேறுயாருக்காயினும் மணம்முடிக்கத் தீர்மானித்திருப்பதையும் எழுதியிருந்தார் வேலாயுதம். நிலைமை மோசமாவதைக்கண்ட கண்ணன், தந்தையை எதிர்த்துக் கடிதம் எழுதுகிறான். ஆனால் அதை அனுப்பும் துணிவு அவனிடம் இல்லை. ராதாவுக்கும் தியாகராசனுக்கும் திருமணம் என்ற செய்தியைத்தாங்கிய அழைப்பிதழ் அவனுக்கு வருகின்றது.

# துளி : ஆறு

எல்லை மீறிவிட்ட சோகம் கண்ணனைத் தொல்லைப்படுத்தியது. தன்னுடைய உணர்ச்சியைக் கட்டுப்படுத்தமுடியாது தவித்தான் அவன். கட்டுப்படுத்தாமலிருப்பதே நல்லது போலவும் தோன்றியது.

அறைக்குட்சென்று கட்டிலின் மேல் 'தொப்' என்று விழுந்தான். நெஞ்சம் உருகியது. கண்ணீர் பெருகியது.

நிமிடங்கள் மணிகளாகி, மணிகள் நாளாக உருண்டன. அன்று முழுவதும் அன்னம் தண்ணீரின்றி அந்த அறைக்குள்ளேயே அடைபட்டுக்கிடந்தான். திறந்துகிடந்த அறைக் கதவுவழியாகக் கனகலிங்கத்தார் அடிக்கடி எட்டிப்பார்த்ததையும் கவனியாது வேதனைத் தீயிலே கிடந்து வெந்து சாம்பராகிக்கொண்டிருந்தான்.

'ராதா! நீ எப்படியடி இந்தக் கல்யாணத்துக்குச் சம்மதித்தாய்? என்ன கஷ்டம் நேர்ந்தாலும் எனக்காகக் காத்திருக்கும்படி எழுதினேனே. என் எழுத்தில் உனக்கு நம்பிக்கை பிறக்கவில்லையா ராதா? காலன் பிரித்தாலும் நம் காதல் அழியாது என்றுயே, அதையும் மறந்துவிட்டாயா? என் கண்மணி உன்னுடன் கைகோத்துக்கொண்டு களிப்புடன் வாழலாம் என்று காலமெல்லாம் கனவுகண்டேனே! ஒரு கணப்பொழுதில் எல்லாவற்றையுமே இடித்துச் சிதைத்துவிட்டாயே ராதா! உன்னை உயிரோடு பறிகொடுத்துவிட்ட நான், இனி உன்மத்தம் பிடித்து ஊரெல்லாம் அலையவேண்டும் என்றுதான் நீ விரும்புகின்றுயா?'

நினைவுத் தடத்தில் அவன் நெஞ்சப் பறவை சிக்கித் தவித்தது. கண்ணீரும் சிந்தனையும் அவனைக் கசக்கிப் பிழிந்து கலக்கிக் கரைத்தன.

இரவு ஏழுமணிவரையில், கனகலிங்கத்தார் அறைக்குள் வந்து 'சுவிச்'சைப் போட்டார்.

பைத்தியக்காரனைப் போன்றிருந்த கண்ணனின் நிலை பார்க்கப் பரிதாபமாக இருந்தது. கனகலிங்கத்தாரைக் கண்டதும் மீண்டும் குமுறிக் குமுறியழுதான் அவன்.

'பெற்ற தந்தையிலும் மேலான பாசத்துடன் என்னைக் கவனித்து வந்தீர்கள்... உங்களை மலைபோல நம்பியிருந்தேன் நான்... கடைசியில் எல்லாவற்றையும் அலைபோலச் சிதறடித்துவிட்டீர்களே!' என்று குற்றஞ் சாட்டுவதைப் போன்றிருந்தது, கண்ணனின் பார்வையும் அழுகையும்.

அவனருகே சென்று அமர்ந்தார் அவர். அன்புடன் அவனுடைய தோள்களை வருடினுர். "தம்பி! நடந்தது நடந்துவிட்டது. இனி அதைப் பற்றிச் சிந்திப்பது முட்டாள்த்தனம். எல்லாம் நன்மைக்கே! என்று நினைத்து ஆறுதலடைவதுதான் சரி... இனி எழும்பும், சாப்பிடுவோம்...!" என்றுர்.

கண்ணனிடமிருந்து பொங்கிப் பாய்ந்தன வார்த்தைகள்.

"என்னை எவருமே தடுக்கமுடியாது. நான் இப்போதே யாழ்ப்பாணம் போகின்றேன். ராதாவைக் கண்டு, நடந்த விஷயங்களைக் கேட்க

வேண்டும். கடைசிநேரத்திலாவது நான் வந்துவிடமாட்டேனு என்று ஏங்கிக்கொண்டிருப்பாள் அவள்."

முன்போல், மீண்டும் அமைதியாகவே பதிலளித்தார் கனகலிங்கம். "இனி நீர் அங்கேபோய்ப் பிரயோசனமில்லை... கல்யாணம் முந்தநாள் முடிந்திருக்கும்... அழைப்பிதழைக் கவனமாகப் படியும்... அவசரத்திலும் ஆத்திரத்திலும் நீர் திகதியைச் சரியாகக் கவனிக்கவில்லை."

அவர் சொன்னது அத்தனையும் சரி. ராதாவின் கல்யாணம் இப்போது முடிந்துதானிருக்கும். அழைப்பிதழிற் குறிப்பிட்டுள்ள திகதியைப் பார்த்தான் கண்ணன். கல்யாணத்திற்கு முன்பு அனுப்பப்பட்ட அந்த அழைப்பிதழ், இத்தனை விரைவாகவந்து, கல்யாணம் நடைபெற்று முடிந்த மூன்றும்நாள்தான் கொழும்பையடைந்தது!

அதற்குமேல், அழுவதற்குக்கூட கண்ணனுல் முடியவில்லை. அதிர்ச்சியடைந்துபோய் அப்படியே அமர்ந்துவிட்டான் அங்கே.

நீண்ட நேரத்தின்பின், தயங்கித் தயங்கி, அவனைத் தொட்டசைத்தார் கனகலிங்கம்.

"உம்முடைய மனநிலை எனக்குப் புரிகிறது... என்றாலும் விதியை யாரால் வெல்லமுடியும்? தாரமும் குருவும் தலைவிதி... சரி, வாரும் சாப்பிடலாம்" என்று சொல்லி எழுந்தார் அவர்.

அவருடைய உருக்கமான இந்த வார்த்தைகளுக்குக் கட்டுப்பட்டான் கண்ணன். அவருடன் எழுந்துசெல்ல முயன்றுன், கால்கள் தடுமாறின. விழுந்துபோவதற்கிருந்த அவனைக் கைத்தாங்கலாகச் சாப்பாட்டு மேசைக்கு அழைத்துச்சென்றுர் கனகலிங்கம்.

பசியும் ருசியும் அவனுக்குத் தெரியவில்லை. கனகலிங்கத்தாரைத் திருப்திப்படுத்துவதற்காகச் சிலவற்றை உள்ளே தள்ளினுன் கண்ணன்.

'எனக்குமட்டும் அழைப்பிதழ் உரியகாலத்திலேயே கிடைத்துவிட்டது. என் அருமை நண்பனுடைய மகளின் கல்யாணத்திற்குச் செல்ல வேண்டியது என் கடமைதான் ஆனுல் அதிலும்பார்க்க மேலான ஒரு கடமையை நான் இங்கிருந்து செய்ய வேண்டியிருக்கிறது."

கண்ணன் நிமிர்ந்து அவரைப் பார்த்தான்.

"சித்தங்கலங்கிய உம்மைப் பாதுகாக்கவேண்டியது என் முதற்கடமை. நீர் ஏதாவது எக்கச்சக்கமாக நடந்துகொள்ளாமல் நான் கணகாணிக்க வேண்டும் என்பதற்காகவே, நண்பன் சொல்லப்போகும் குறையையும் பொருட்படுத்தாது உம்முடன் இங்கிருக்கிறேன்."

இப்படியும் ஒரு மனிதரா? அவரைக் கையெடுத்துக் கும்பிடவேண்டும்போலிருந்தது கண்ணனுக்கு ஆனுல் அதற்குள் கண்ணீர் முந்திக்கொண்டது. அந்தப் பெரும் மனிதருக்கு முன்னுல் இருந்து கண்ணீர் பெருக்கவிரும்பாது, எழுந்து அப்பாற் சென்றுன் கண்ணன்.

∴ ∴ ∴

**நா**ட்கள் கழிந்தன. பழைய நினைவுகள் அவனைப் பிழிந்தன. இன்ப நினைவெல்லாம் அவன் உள்ளத்திலிருந்து அழிந்தன.

துன்பப் பெருவெள்ளம் அவனை மூடிப் பாய்ந்து கொண்டிருந்தது அவன் அலுவலகத்துக்குச் செல்ல வில்லை. உயிருக்குயிராக நேசித்த வளே இல்லாதபோது இனிப் பதவி ஏன்? பணம் ஏன்?

கனகலிங்கத்தார் எதுவுமே பேச வில்லை. அநாவசியமாக அவனுடன் உரையாடி அவனுடைய துக்கத்தை யும் வைராக்கியத்தையும் அதிகரிப்ப தற்கு அவர் விரும்பவில்லை. அக லாது, அணுகாது அவனைக் கண் காணித்து வந்தார். காலம் கழியக் கழிய, அவனைக் கப்பிய சோகம் கரை யக் கரைய, அவன் பழைய கண்ண னாக மாறும் பெருநாளை எதிர்பார்த் துப் பொறுமையுடன் காத்திருந்தார் அவர்.

அவர் எதிர்பார்த்தது வீண்போக வில்லை. காலம் எனும் மருத்துவன் கண்ணனுக்கு வைத்தியம் செய்தான். நல்லவரால் செய்யமுடியாததை நாள் செய்தது. துயரக் கடலின் அலைகள் ஓய்ந்தன. கண்களை மூடிய கடல் நீர் அவனைக் கரையில் கொண்டுபோய் ஒதுக்கியது.

கண்ணன் அலுவலகத்திற்குச் செல்வதற்கு மூன்று மாதங்களுக்கு மேல் எடுத்தது. ஆனால் அவனால், முன்போல் எதிலும் ஒட்டிக்கொள்ள முடியவில்லை. ஓடும் புளியம்பழமுமா கத்தான் அவனால் வாழமுடிந்தது! வேண்டா வெறுப்பாகத்தான் எதை யும் செய்யமுடிந்தது.

அவனுடைய கல்யாண விஷய மாகத் தந்தை நடராசர் இரண்டு தடவை கடிதம் எழுதினார். மேலெ ழுந்தவாரியாக அவற்றைப் படித்து விட்டு ஒரு 'விரக்திச் சிரிப்பு'டன் அவற்றைக் கிழித்தெறிந்தான் கண்ண ணன்.

'அப்பா! மனிதனுக்கு இதயம் என்று ஒன்று இருப்பதை நீங்கள் மறந்துவிட்டீர்கள்...உங்களிடம் அது இருந்தாற்றானே மற்றவர்களிடமும் அதை எதிர்பார்க்கமுடியும்?... என் வாழ்க்கையைத் தட்டிப்பறித்தது போதாதா? மீண்டும் ஏன் கிட்ட வரு கின்றீர்கள்?... நான் சிலகாலம் உள் ளத்தால் மணஞ்செய்து வாழ்ந்துவிட் டேன். அவ்வளவும் எனக்குப்போதும். உங்களைப் போன்றவர்களின் பிடி வாதத்தையும் சாதிப்பித்தையும் எதிர்த்து யாராவது தன்னைத் தியா கம் செய்தாற்றான் மூடக்கொள்கை கட்கு ஒரு முடிவு ஏற்படும். அமைதி யாக நடக்கவேண்டிய அன்புப் புரட்சி இது. இந்த அன்புப் புரட்சியில் என்னை அணு அணுவாகத் தியாகஞ் செய்வேன். ஆமாம், நான் இனி நாளுக்குநாள் செத்துக்கொண்டே வாழப்போகின்றேன்...என் வழி இது தான், எட்ட நில்லுங்கள் நீங்கள்!'

மாதங்கள் வந்தன, ஆனால் மறைந்த பழைய கண்ணனை அவை களாற் கொண்டுவர முடியவில்லை. அலுவலகத்திலிருந்து புறப்பட்டால், கால்போன திசையில் எங்கேயாவது அலைந்துவிட்டு, கடைசியில் நடந்தே வீட்டிற்குச்செல்வான். ஓய்வெடுத்து உடம்பைப் பாதுகாக்கவேண்டிய தேவைதான் இனி இல்லையே! வாழ் வின் எஞ்சியநாட்கள் ஒருமாதிரிக் கழிந்தால் போதும், அவனுக்கு வேறு ஏதும் வேண்டியதில்லை.

ஃ ஃ ஃ

கால்கள் அவனை ஒருநாள் காலி முக மைதானத்திற்கு இழுத்துச் சென் றன. அன்று சனக்கூட்டம் அதிகமி ல்லை. இவ்வுலக நினைவு சிறிதுமின்றிக்

கண்களை எங்கோ செலுத்தியபடி கனவில் நடப்பதைப்போல் நடந்துசென்ருன் கண்ணன்.

''மிஸ்டர் கண்ணன்!...... கண்ணன்!"

கண்ணனின் காதுகளில் தேன் பாய, அவன் திகைத்து நின்ருன்; பின் திரும்பிப் பார்த்தான்,

அங்கே நிற்பது ராதாவா? அவளுடன் ஒட்டினுற்போல் அவளருகே நிற்பது அவளுடைய கணவனு? கண்ணன் காண்பது கனவல்லவே!

பிரமை நீங்கச் சிறிது நேரம் சென்றது.

ராதையை அள்ளி அணைக்க அவனுடைய உள்ளம் துடித்தது; கைகள் விரிந்தன. ஆனல் தன்னைச் சமாளித்துக்கொண்டான்.

''இவர்தான் மிஸ்டர் கண்ணன் நான் உங்களுக்குச் சொன்னேனே அந்த மாமாவின் மகன்."

''இவர் என் கணவர். இங்கே கொழும்பில்தான் வேலைசெய்கிருர்... நாங்கள் இப்போது கொட்டாஞ்சேனையில் இருக்கிறேம்."

இருவரையும் அறிமுகம் செய்து வைத்தாள் ராதா. அவர்கள் கைகூப்பிக்கொண்டனர்.

''எங்கள் கல்யாணத்திற்கு உங்களை எதிர்பார்த்தேன்...என்னகோபமோ, நீங்கள் வரவில்லை''—ராதா உரிமையுடன் குறைப்பட்டாள்.

கண்ணனுடைய தொண்டைக்குள் என்னதான் புகுந்து கொண்டதோ! அவனல் எதையும் பேசமுடியவில்லை. வெறித்து நோக்கியபடி நின்ருன்.

மௌன நிமிடங்கள் மெல்ல நகர்ந்தன,

''மிஸ்டர் கண்ணன்! ஒய்வான நேரங்களில் எங்கள் வீட்டுக்கு வாருங்களேன். சாவகாசமாகப் பேசிக்கொண்டிருக்கலாம்''— முகவரியைக் கூறி, முழுமனதுடன் அவனை அழைத்தான் ராதாவின் கணவன்.

''ஆம் கண்ணன் கட்டாயம் நீங்கள் வரவேண்டும். நான் காத்திருப்பேன்',—ராதாவும் கெஞ்சினள்.

''முயன்று பார்க்கிறேன்'' ...கண்ணனின் வாய்மட்டும் வார்த்தைகளை உதிர்த்தது. உள்ளன்புடன் அழைப்பை ஏற்க அவனல் முடியவில்லை.

''எங்களுடன் சேர்ந்து வந்த அடுத்த வீட்டுக்காரர்கள் எங்களுக்காக அதோ, காத்துக்கொண்டு நிற்கிருர்கள். நாங்கள் போய் வருகின்ருேம்...வீட்டு முகவரிவை மறந்து விடாதீர்கள் கண்ணன்" என்று சொல்லிக் கொண்டே, தன் கணவனுடன் ராதா அங்கிருந்து போய் விட்டாள்.

அவர்கள் செல்வதையே பார்த்துக்கொண்டு சிறிது நேரம் அங்கு நின்ருன் கண்ணன்.

அதற்குமேல் அவனல் அங்கு நிற்கவோ, நடக்கவோ முடியவில்லை. அருகிலிருந்த சிமிந்தி ஆசனத்தில் அமர்ந்தான்.

ராதையும் அவளுடைய கணவனும் அவன் மனத்திரையில் தோன்றினர்கள். அவள் சிரித்துச் சிரித்துப் பேசுகின்ருள். அவன் அவளை ரசித்து ரசித்து மகிழ்கின்ருன். கல்யாணம் என்ற ஒன்று நடந்தபின், ராதா, தன் பழைய வாழ்க்கையையே மறந்து விட்டாளோ? அந்த இன்பமயமான வாழ்க்கையை உதறிவிட்டு எப்படி அவளால் இருக்க முடிகிறது?

'ம்... நான்தான் அவளை எண்ணியெண்ணி நித்தமும் பித்தனுகின்றேன். அவளுக்கென்ன? காதலிக்க ஒருவன்...கைப்பிடிக்க இன்னெருவன்...ராதா! என் அன்பின் ஆளத்தை உணரமுடியாத அரக்கி நீ! உனக்காகத்தானு நான் நாளிளிலும் பொழுதிலும் உருகுகின்றேன்? காதல், கற்பு ஒழுக்கம் என்ருல், என்ன விலை? என்று கேட்கக்கூடிய உன்னையா நான் காதலித்தேன்?'

கண்ணனின் நரம்புகளில் முறுக்கேறியது. உள்ளம் முழுவதிலும் ஆத்திரம் பொங்கியது. யாருக்காகத் தந்தையை எதிர்த்து, தாயை மறந்து தான் நினைத்தபடி வாழ முடிவு செய்தானே, அவளே அவன் கண்முன்னுல் வேறெருவனுடன் சிரித்துப் பேசி ஒட்டியுறவாடுவதைக் காண அவனுல் சகிக்க முடியவில்லை.

'ராதா! என்னை நீ ஏமாற்றிவிட்டாய்! உன்னை நம்பி நான் நாசமாகி விட்டேன்!'

நேரம் செல்லச் செல்ல, அவனுடைய மனதில் பொருமையும், பழிக்குப் பழி வாங்கும் எண்ணமுமே மேலோங்கின; ஒரு பெண்ணுல் ஏமாற்றப்பட்டுவிட்டோமே என்ற உணர்ச்சி உள்ளத்தைக்குடைய அவன் வீடு சென்றடைந்தான்.

இரண்டொருநாட்கள் கழிந்தன. வெறியனைப் போலானுன் அவன்.

'ராதா! உன்னுடன் எப்படியெல்லாம் வாழவேண்டும் என்று கனவு கண்டேன் தெரியுமா? நீயும் கூட எத்தனை உறுதிகளையெல்லாம் கூறினுய்? ஆனுல்இப்போது என்னை ஏமாற்றியதுடன் மட்டும் திருப்தி ஏற்படவில்லை. என்னை உன் வீட்டிற்கே வரவழைத்து, உன் இன்ப வாழ்க்கையைக் காட்டி என்னைப் பரிகசிக்க நினைக்கிருய்...அதைக் கண்டு நான் எரிந்து புழுங்கிச் சாகவேண்டும் என்று விரும்புகிருய். ராதா! என் கனவைச் சிதைத்து விட்டுக் கை கொட்டிச் சிரிக்கிருய் நீ. உன் வாழ்வைக் குலைக்கப் போகிறேன் நான் என் கண்முன்னுலேயே நீ அலைந்து உலையப் போகிருய்...!'

கொட்டாஞ் சேனையில் ராதாவின் வீட்டைக் கண்டுபிடிப்பது கண்ணனுக்கு கஷ்டமாக இருக்கவில்லை. அவன் கதவில் தட்டியதும் ராதா தான் வந்து கதவைத் திறந்தாள்.

கண்ணன் வீட்டிற்கு வந்துவிட்டானே என்ற நிதர்சன உண்மை ஏற்படுத்திய மகிழ்ச்சி, அவனை நிமிர்ந்து பார்த்ததும் பறந்துவிட்டது. கண்கள் சிவக்க, உடம்பு ஆத்திரத்தால் நடுங்க, மதங்கொண்ட யானையைப் போல்குமிறிக் கொந்தளித்துக்கொண்டுநின்ருன் கண்ணன்.

அந்த நிலையில் அவனை உள்ளே அழைப்பதா, வேண்டாமா? என்ற பிரச்னை ராதாவின் மனதைக் குடையத் தொடங்கியது. முடிவில், 'என்ன இருந்தாலும், நானறிந்த கண்ணன் தானே!' என்ற தைரியத்துடன் உள்ளே அழைத்து உட்கார வைத்தாள்.

தன் பார்வையை எங்கோ செலுத்தியபடி அங்கே சென்றமர்ந்தான் கண்ணன்.

"காலிமுக மைதானத்தில் சந்தித்த அடுத்த நாளே நான் உங்களை இங்கு எதிர்பார்த்தேன்...இன்றைக்குத்தான் எங்கள் வீடு உங்களுக்குத் தெரிந்ததாக்கும்..." அன்புடன் குற்றஞ் சாட்டினுள் ராதா,

கண்ணன் ஒன்றுமே பேசாது முன்போல் எங்கோபார்த்தபடி இருந்தான். ஆனால் பார்வையில், வரவரக் கொடூரம் அதிகரித்ததை மட்டும் ராதாவால் லேசாக அவதானிக்க முடிந்தது.

"எவ்வளவோ ஆசையுடன் உங்களை அழைத்தேன். என்னுடன் பேசுவதற்குக் கோபமானால், இப்போது ஒன்றும் பேசவேண்டாம்...கோபம் ஆறியவுடன் பேசலாம்... நான்தேனீர் எடுத்து வருகின்றேன்"—கண்ணனைச் சமாதானப்படுத்தும் வகையிற் பேசிவிட்டு உள்ளே செல்லத் திரும்பினாள் ராதா.

"ராதா!"—கண்ணனின் கோபக் குரல், ராதாவின் காதுச் சவ்வுகளின் பலத்தைப் பரீட்சித்தது!

அவள் திரும்பினாள். கண்ணனின் நிலை பயங்கரத்தை விளைவிப்பதற்குப் பதிலாகப் பச்சாத்தாபத்தையே ஏற்படுத்தியது, வாழ்க்கையில் ஏற்பட்ட விரக்தி கண்ணனை வெறியனாக்கியதை அவள் நன்குணர்ந்தாள். அதற்கெல்லாம் அடிப்படைக் காரணம், தானே என்ற நினைவு அவளுடைய உள்ளத்தை வருத்தி உருக்கியது.

ராதா பேசாமல் அப்படியே நின்றாள்.

"உன்னை நம்பிச் சீரழிந்த என்னைப் பார்த்து நீ சிரித்து வாழுகின்றாய். உனக்கு இன்று நேரும் முடிவைப்பார்த்து உலகமே சிரிக்கப் போகின்றது!"

ராதா அசையாமல் அப்படியே நின்றாள்.

"எந்த ஆசைக்கரங்கள் உன்னை அன்புடன் அணைக்கக் காத்திருந்தனவோ, அதே கரங்கள் இன்று பாசக் கயிறாகி உன்னைப் பழிவாங்கப் போகின்றன"

ராதா இன்னமும் அப்படியே நின்றாள்.

'எனக்குப் போதையூட்டிய விழிகளைத் தோண்டி எடுக்கவேண்டும் உறுதியளித்த வாயைக் கிழித்தெறிய வேண்டும், என்ற திட்டத்துடன் கிட்டச் சென்றான் கண்ணன்.

ராதா இப்போதும் அப்படியே நின்றாள்.

மூச்சுமோதும் தூரத்தில் இருவரும் நின்றார்கள்.

நீண்ட மௌனம் நிமிடங்களை விழுங்கியது. கடைசியில். மெல்ல வாய் திறந்தாள் ராதா. "அத்தான். நீங்கள் என்ன தண்டனையைக் கொடுத்தாலும் ஏற்கவேண்டும்என்று என்றோ முடிவு செய்துவிட்டேன்... உங்கள் கையினால் சாகும் பாக்கியத்தையாவது எனக்குக் கொடுங்கள்"—நிதானமாக நிறுத்திப் பேசினாள் ராதா.

கண்ணன் மௌனமானான். எதிர்ப்பையும் சமாளிப்பையும் எதிர்பார்த்தவன், இப்போது ஏமாந்து நின்றான்.

"நான் உங்களுக்குச் செய்தது பச்சைத் துரோகந்தான். உங்களின் மனைவியாகவும், அதே நேரத்தில் என் அப்பாவின் மகளாகவும் வாழ்வதற்கு மனதார விரும்பினேன். என்னை மீறிய ஏதோ ஒரு சக்தி இதைத் தடுத்துவிட்டது. என் வாழ்க்கையின் போக்கை நானே தீர்மானிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. உங்களைச் சந்திக்க முடியவில்லை; உங்களுடன் தொடர்பு கொள்ள முடியவில்லை. எங்கள் இருவரையும் இணைத்து வைக்க முயன்ற அப்பாவே, கடைசியில் தன் இயலா

மையைக் கூறி என்னைத் தன்வழியில் வரும்படி கெஞ்சினர்...அப்பாவின் சொல்லைக்கேட்டு நடப்பதைத் தவிர வேறுவழி இருக்கவில்லை. நீங்கள் அங்கிருந்தாலாவது மனத்தைரியத்துடன் இருந்திருப்பேன்''

''கடைசியில் என்மேல்தான் குற்றஞ் சாட்டுகிருயா?''— கொதித்தான் கண்ணன்.

''ஊரில் வந்து நீங்கள் பார்த்திருந்தால், உங்கள் அப்பா செய்த அட்டகாசங்கள் ஓரளவு புரிந்திருக்கும். இல்லாததையும் பொல்லாததையும் சொல்லி எங்கள் குடும்பத்தைப் பற்றி ஊர்சிரிக்கச் செய்துவிட்டார். இரகசிய இரகசியமாக எங்கள் வீட்டிற்கு நெருப்பு வைத்து எங்களை அழித்தொழிக்கவும் திட்டமிட்டாராம். இத்தகைய ஒருவர் தன் மகனை எனக்குக் கல்யாணஞ் செய்து வைப்பார் என்பது ஏழேழு ஜன்மத்திலும் சாத்தியமாகாது... இதைநான் நன்கு உணர்ந்தேன். நான் கல்யாணஞ் செய்யாமலிருந்தால் உங்களின் உயிருக்குக் கூடச் சில சமயம் ஆபத்து ஏற்படலாம் என்று பயந்தேன்...உங்கள்உயிரையும் என் அப்பாவின் மானத்தையும் காப்பாற்ற முடிவு செய்தேன் அவர் பேசிவந்த மாப்பிள்ளைக்கு மாலையிட்டேன்."

ராதா அழவில்லை; ஆனுல் அவளுடைய குரல் அழுதது.

மீண்டும் சீறியெழுப்பினன் கண்ணன். அவளுடைய கழுத்தை நெரிப்பதற்குத் துருதுருத்தன அவனுடைய கைகள்.

''என் அப்பாவின் ஆணையையும் அதிகாரத்தையும் மீறி உன்னைக் கல்யாணம் செய்வேன் என்று கடைசியில் ஓர் அவசரக் கடிதம் எழுதினேனே...அதற்குள் ஏன் அவசரப்பட்டாய் நீ...? எனக்கு இப்போதுதான் எல்லாம் நன்கு புரிகிறது...என் அப்பா செய்த அநியாயங்களுக்காக என்னைப் பழிவாங்கத் திட்டமிட்டாய் பாதகி...!''

திடீரென்று கண்ணனின் வாயைப் பொத்தினுள் ராதா.

''அத்தான்! தயவு செய்து அப்படியெல்லாம் சொல்லாதீர்கள். உங்களை நான் வரும்படி அழைத்ததேஉங்களிடம்எல்லாவிஷயங்களையும் கூறி உங்களின் மன்னிப்பைப் பெறுவதற்காகத்தான்... இப்போது நான் மன்னிப்பைக் கூட விரும்பவில்லை...உங்கள் தண்டனையைத் தான் மனதார விரும்புகிறேன்... அப்பாவின் வழியில் செல்வது என்ற என்முடிவு உங்கள் வாழ்க்கையை இவ்வளவு தூரம் சிதைத்துவிடும் என்பதைப் பேதை நான் அன்று எண்ணிப்பார்க்கவில்லை... ஆனுல் ஒன்றுமட்டும் உறுதியாகச் சொல்வேன்; உங்கள் ராதா வஞ்சகியல்ல, என்னுள்ளே வளரும் என் குட்டிக் கண்ணன்மேல் ஆணையாகச் சொல்கிறேன். தயவு செய்து இதை நம்புங்கள்."

திடுக்கிட்டான்கண்ணன்! ராதா என்ன பேசுகிருள்?

''என்னுள்ளே வளரும் குட்டிக் கண்ணன் மேல் ஆணையாக... என்னுள்ளேவளரும் என்குட்டிக் கண்ணன்...குட்டிக் கண்ணன்... குட்டிக் கண்ணன்!'

அந்தக் கடைசி வார்த்தைகளுக்கு என்ன மந்திர சக்தி இருந்

ததோ! செயலற்று நின்றான் கண்ணன் சிறிதுநேரம்.

மாசு மறுவின்றி இலங்கும் ராதாவை அப்போதுதான் பூரணமாக, நிதானமாகப் பார்த்தான். அவள் முன்னைய ராதாவேயல்ல, தாய்மை எனும் புனிதநிலையை நோக்கித் தளர்நடை போட்டுக் கொண்டிருக்கும் தெய்வ மங்கை அவள்! ஒரு குட்டிக் கண்ணனை உருவாக்கும் கோகுல யசோதை அவள்!

'குட்டிக் கண்ணன் ...!'

கண்ணனின் உள்ளம் கிளுகிளுத்தது. ராதை அவனை மறக்கவேயில்லை. அவளுடைய உள்ளத்தைப் போல், அவளுடைய காதலும் தூய்மையானது!

அவளைக் கும்பிட வேண்டும் போலிருந்தது கண்ணனுக்கு; தலையில் தூக்கிக் கொண்டாட வேண்டும் போலுமிருந்தது.

ஆனால் எதையும் செயற்படுத்தாது அன்பின்வடிவாய் நின்ற அவளையே பார்த்துக்கொண்டு நின்றான்.

வெறுப்பும் வெறியும் விரக்தியும் அவனிடமிருந்து வெளியேறின. கண்ணனும் அங்கிருந்து வெளியேறினன்.

"கண்ணன்......!' கனிவோடு அழைத்தாள் ராதா.

கட்டுப்பட்டான் கண்ணன். திரும்பி வந்து அமர்ந்தான் உள்ளே.

சற்று முன் நடைபெற்ற நிகழ்ச்சிகளை முற்றிலும் மறந்து விட்டவர்களைப் போல இருந்தனர் இருவரும்.

"வீட்டிற்கு வந்தவரை வெறுமனே அனுப்பினால் 'அவர்' கோபிப்பார்... கொஞ்சம் இருங்கள். தேநீர்

---

## திருக்குறள் கீர்த்தனை - 11

வானின்றுலகம் வழங்கி வருதலால்
தானமிழ்தம் என்றுணரற் பாற்று.

இராகம்: ஷண்முகப்பிரியா. தாளம் : ஆதி

**பல்லவி**

பெய்யும் மழையது பெருமுலகனைத்தையும்
உய்யும் படி செய்தே உயிர்களைக் காத்திடும்

**அனுபல்லவி**

தெய்வமழை இங்கு தேவாமிழ்தம் போலவே
வையகமனைத்தையும் வாழவிக்க வந்தே.

**சரணம்**

அமிழ்தம் உண்டவர் அழியாது நிலைத்தல் போல
அவனியை அழியாது ஆச்கிடும் மழையிதால்
அமிழ்தமாம் உலகிலம் மழையே என்றே அதை
அறிந்திடுவீர் நீரும் நிலவளமும் செழிக்க

—யாழ்ப்பாணம் ந. வீரமணி

அருந்தி விட்டுத்தான் போக வேண்டும்"

ஒவ்வொரு அடியாக எடுத்து வைத்து அடுக்களைக்குள் சென்றாள் ராதா. ஒவ்வொரு அடியாக எடுத்து வைத்து அவனுடைய உள்ளத்தினின்றும் இறங்கினாள் அவள்.

புதிய உறவு பிறந்தது.

'தங்கைச்சி! "உங்களை நான் என்றுமே மறக்க மாட்டேன்" என்று முன்பு கூறுவாயே! அதன் முழு அர்த்தமும் எனக்கு இன்று தான் புரிகிறது. உன் தூய்மையான அன்பின் ஒளியின் முன்னால், வெறும் உணர்ச்சிகட் குட்படும் நான ஒரு சிறு மின்மினி தான்! ...... உன் குட்டிக் கண்ணனுக்குச் சோடியாக நான் ஒரு குட்டி ராதையைத்தருவேன்...'

கண்ணனின் கண்களிலிருந்து இரண்டு சொட்டுக் கண்ணீர் உதிர்ந்தது.


அந்த ஆனந்தக் கண்ணீரைத் துடைக்க விரும்பாது அந்த இரு துளிகளையும் பார்த்துக் கொண்டே இருந்தான். ஒரு துளியிலிருந்து ஒரு குட்டிக் கண்ணனும் மற்றத் துளியிலிருந்து ஒரு குட்டி ராதையும் எழும்பி அவனுடைய சிந்தையை நிறைத்தனர்.

அந்தப் புதியவளின் தந்தையாக அவனும், புதியவனின் தாயாக ராதையும் நின்று, புதுமணத் தம்பதிகளை இணைத்து வைக்கும் எதிர்காலம் ஒன்று கண்ணனின் சிந்தையிலே எழிற் கோலத்துடன் ஒளிர்ந்தது.

— நிறைவு பெற்றது.



தயாரிப்பாளர்கள்:-
RVG பீடிக் கம்பெனி,
34, மானிப்பாய் றோட், யாழ்ப்பாணம்.




வை. ஜெயகுமார், பம்பலப்பிட்டி

கே: ‚ஜெயகாந்தன்' எழுதிய ''யாருக்காக அழுதான்?" என்ற கதை எந்தப் பத்திரிகையில் வெளியாகியது என்பதைக் கூற முடியுமா?

ப: 17-9-61ல் வெளியான ''ஆனந்தவிகட"னில் இக் குறுநாவல் இடம்பெற்றிருக்கின்றது.

கா. தவராசா காங்கேசன்துறை.

கே: இவ்வாண்டுசாகித்தியமண்டலப் பரிசுகளைப் பற்றிய தங்கள் சொந்த அபிப்பிராயம் என்ன?

ப: நெல்லுக்கிறைத்த நீர்......!

எஸ். மணிவண்ணன், பதுளை,

கே: மிகச் சிறந்த முறையில் ஈழத்திலே ஒரு தமிழ்ப் படத்தைத் தயாரிக்கும்படி ''கலைச்செல்வி" நிர்வாகிகளிடம் சிபார்சு செய்ய விரும்புகிறேன்...?

ப: தங்களுக்கு அவர்களில் என்ன கோபம்? தயவு செய்து சொல்லுங்கள். எச்சரிக்கையுடன் இருக்கும்படி அவர்களுக்கு ஆலோசனை கூறுகின்றேன்.

இ. குமாரசாமி, வட்டுக்கோட்டை

கே: தமிழரசுக் கட்சியினரின் பாதயாத்திரைக்கு, எதிர்பார்த்த அளவு மக்களாதரவு காணப்படவில்லையே, காரணம் என்ன?

ப: ''மக்களாதரவு" என்றால் என்ன? சத்தியாக்கிரகத்தில் பொதுமக்கள் திரள் திரளாகக் கலந்து கொண்டார்களே அதைக் கருதுகிறீர்களா? பாதயாத்திரையின் நோக்கமே வேறு. வீதி வீதியாக, வீடு வீடாகத் தலைவர்கள் நடந்து சென்று பொதுமக்களுடன் நெருங்கிய நேரடித் தொடர்பு கொண்டு தமிழுரிமைக்காக மக்களின் ஆதரவைத் திரட்டுவதுதான் பாத யாத்திரையின் புனித நோக்கம். ஆயிரக் கணக்கில் தொண்டர்களை அழைத்து வெற்றியொலி எழுப்பிக் கொண்டு சென்றால், 'கலகலப்'பாக இருக்கும்; ஆனால் நோக்கம் நிறைவேறாது.

''தமிழ்வேந்தன்", கண்டி.

கே: பிரபல நாவலாசிரியர்

''மணிவண்ணன்'' விரைவில் இலங்கைக்கு வரப்போகின்றாராமே, உண்மைதானா?

ப: இலங்கையர்கோன் நினைவு விழாவிற்கு வரும்படி, நினைவு விழாச் சபையினர் மணிவண்ணனை அழைத்துள்ளார்கள். அவரும் வருவதாக ஒப்புக்கொண்டிருக்கிறார். அரசாங்கம் உரிய காலத்தில் எல்லா அனுமதிகளையும் வழங்கினால், நவம்பர் 15ல் ஏழாலையில் நடைபெறும் இலங்கையர்கோன் விழாவில் மணிவண்ணனைச் சந்திக்கலாம்!

த. இராசநாதன், வவுனியா.

கே: பொதுவுடைமையரசாங்கம் ஒன்று ஏற்பட்டால், இலங்கையில் பாலும் தேனும் பாய்ந்தோடும் என்று நம்புகின்றீர்களா?

ப: அப்படித்தான் பிரசாரம் செய்கின்றார்கள்— பொதுவுடைமைவாதிகள். இது பற்றி முன்பு எனக்குச் சிறிது சந்தேகம் இருந்தது. ஆனால் இப்போது அந்தச் சந்தேகம் பெரிதாக வளர்ந்ததுமல்லாமல் உறுதியாகவும் பதிந்துவிட்டது. யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற ஒரு விழாவில் இடம்பெற்ற நிகழ்ச்சிகளை நானே நேரில் கண்டேன். ஆனால் அந்த நிகழ்ச்சிகளைப் பற்றிப் பொதுவுடைமை நண்பர்கள் சிலர் விடுத்த அறிக்கைகளைப் படித்த போது, இவ்வாறு மழுப்பியும் மறைத்தும் திரித்தும் செய்திகளை வெளியிடுகிறார்களே என வருந்தினேன். கண்ணால் கண்ட நிகழ்ச்சிகளின் கதி இதுவென்றால், கண் காணாத ரஷ்யாவிலும், சீனாவிலும் என்ன நடக்கின்றனவோ, யாரறிவார்? சில பத்திரிகை ஆசிரியர்களை உருட்டியும் மிரட்டியும் வைத்தால், பாலும் தேனும் பாய்கின்றது என்று மட்டுமல்லாமல், அவை தாமாகவே மக்களின் வாயிலும் வயிற்றிலும் சென்று நிறைகின்றன என்று பிரச்சாரம் செய்யலாம். அதிகாரத்திற்கு வருவதுதான் பொதுவுடைமையாளர்களின் இலட்சியமே தவிர, மக்களுக்கும் நாட்டிற்கும் தொண்டு செய்வதல்ல.

கே. எஸ். நாராயணன், வத்தளை

கே: செம்பியன் செல்வன், செங்கை ஆழியான் ஆகியோரின் சொந்தப் பெயர்களைச் சொல்ல முடியுமா?

ப: செம்பியன்செல்வனின் சொந்தப்பெயர் ஆ. இராஜகோபால். செங்கைஆழியானின் பெயர் குணராசா. இருவரும் இலங்கைப் பல்கலைக் கழகத்தில் புவியியல் சிறப்பு வகுப்பில் பயிலும் மாணவர்கள்.

செ. இராசகோகிலம், மருதானை,

கே: தாங்கள் ஒவ்வொருநாளிலும் முதன் முதலாகச் செய்யும் வேலை என்ன?

ப: நித்திரைவிட்டெழுவது!

பொ. சீதாலட்சுமி, நல்லூர்.

கே: நாவலர் இன்றிருந்தால்...?

ப: நாயன்மார்களைப் பாத்திரமாக்கி மரபு தவறாத ஒரு நல்ல நாவல் எழுதி, தான் நாவில் மட்டுமின்றி நாவலிலும் வல்லவர் என்பதைக் காட்டியிருப்பார்!

ஆ. கங்காதரன், திருமலை.

கே: சுருக்கமாகப் பதில் தருக.: ஈழத்து எழுத்தாளர்கள்; ஈழத்து நடிகர்கள்; ஈழத்து ரசிகர்கள்.

ப: ஈழத்து எழுத்தாளர்கள்: வாலைவிட்டுத் தும்பைப் பிடிப்பவர்கள்; ஈழத்து நடிகர்கள்: தம்மை மதிக்கின்றார்களில்லையே என்று குறைப்படுவார்களே தவிர, தாமும் மற்றைய கலைஞர்களை மதிக்க வேண்டுமே என்ற எண்ணம் சிறிது மற்றவர்கள்; ஈழத்து ரசிகர்கள்: உள்ளூர்ச் சரக்கென்றால் உதட்டைப் பிதுக்கிவிட்டு, கடல் கடந்து வருபவற்றைக் கை நீட்டி வரவேற்பவர்கள்!

வெட்டிஒட்டும் முகவரி:

**தாண்டவக்கோன்**
மே/பா கலைச்செல்வி
பாலன்வெளியீடு, செட்டிகுளம்.

திரைப்பட விமர்சனம்:

# தோட்டக்காரி

—ஸ்ரீ கணபதி பிக்சர்ஸ

இலங்கையில் தயாரிக்கப்பட்ட முதல் தமிழ்படமென்ற முறையில் முதலில் தயாரிப்புக் குழுவினரைப் பாராட்டுகிறோம் - துணிவை மெச்சுகிறோம்.

தோட்டக்காரி - சாதாரணமாக நாடகங்களில், அதுவும் பல நாடகங்களில் கையாளப்பட்டு வந்த கதைச் சுழல்தான். இப்படிப்பட்ட கதையமைப்பைப் பல நாடகங்களில் பார்த்துச் சலித்து - புளித்துப்போனபின் திரைப்படமாகத் தந்திருக்கிறார்கள். தோட்டக்காரி கதையை நினைக்கும்பொழுது ஒரு பக்கத்தால் கோபமும் மறுபக்கத்தால் அனுதாபமும் ஏற்படத்தான் செய்கிறது. நல்லகதையையாவது தெரிந்தெடுத்திருக்கலாம்......

ஒரு 'டப்பிங்' படத்தைப் பார்ப்பதுபோன்ற உணர்வு— ஊமைப் படத்தைப் பார்ப்பதுபோன்ற உணர்வு - நாடகம் பார்ப்பது போன்ற உணர்வு, ஆகியவை தோட்டக்காரி படத்தைப் பார்க்கும் பொழுது ஏற்படுகின்றன. இன்னும் சிறிது கவனம் செலுத்தியிருக்கலாம்......

ஒலிப்பதிவாளர் ஒரேயடியாக ஒத்துழைக்கமறுத்து விட்டாரா?

நடிப்பில் வெறும் நாடக மணம் வீசுகிறது. சினிமா நடிப்பு வேறு என்பதை உணர்ந்திருந்தால் ......

"பாம்பிற்கோ பல்லில் விஷமுண்டு" ... என்ற பாட்டு ஒலிக்கும் பொழுது புற்றால் பாம்பு சீறி வெளியேறுவதை நன்முறையில் படமாக்கியிருக்கிறார்கள். திறமை இருக்கிறதென்பதை நிரூபிக்கிறார் டைரக்டர்.

கதை, வசனம், டைரக்ஷன் ஆகிய மூன்று பெரும் பொறுப்பை ஏற்ற பி. எஸ். கிருஷ்ணகுமார் டைரக்ஷனில் வெற்றிபெற்றுள்ளாரென்றே கூறவேண்டும்.

''என்னை நீ மறந்தாலும்'...... என்றபாட்டொன்று மனதில் நிற்கிறது.

இவ்வளவு தூரம் சினிமாத் துறையில் முன்னேறியுள்ள இந்தியாவில்கூட தமிழ்ப்படங்கள்—தோட்டக்காரி'யிலும் பார்க்க மோசமான நிலையில் இன்றும் வருகின்றதென்றால் இலங்கையில் முதல் தமிழ்படமான தோட்டக்காரியை எவ்வளவு பாராட்டினாலும் தகுமல்லவா? இது பெரிய சாதனையும் கூட.

மொத்தத்தில் தோட்டக்காரிக்கு; இலங்கையில் தயாரிக்கப்பட்ட முதல் தமிழ்படமெனபதற்காகவும் இலங்கையின் இயற்கைவளத்தைக் காணவும் ஒருமுறை சென்றுவரலாம்.

—இரா. சிவசந்திரன்.

# வருந்துகின்றோம்.

''கலைச்செல்வி''யின் கௌரவ இணையாசிரியர்களுள் ஒருவராகிய "தமிழ்ச்செல்வன்" அவர்களின் அன்பு மனைவி திருமதி. புஷ்பதேவி அவர்கள் சென்ற 2-9-63ல் காலமாகிவிட்டசெய்தியை மிக்க மனவருத்தத்துடன் நேயர்களுக்குத் தெரிவிக்கின்றோம். கணவருடன் சேர்ந்து, ''கலைச்செல்வி"யின் வளர்ச்சிக்காகப் பாடுபட்டவர் இப்பெண்மணி. 3-10-63ல் நடைபெற்ற அன்னாரின் ஆத்ம சாந்திக் கிரியைகளில் ஈழத்து எழுத்தாளர்களும் கலைஞர்களும் கலந்து கொண்டார்கள். அருமை மனைவியை இழந்து தவிக்கும் திரு. தமிழ்ச்செல்வன் அவர்கட்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், இறந்தவரின் ஆன்மா சாந்தியடையவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

—நிர்வாகி கலைச்செல்வி.

புதிய கட்டுரைத் தொடர்:

## கலைகளின் உறைவிடங்கள்.

கலைகள் எல்லாவற்றிற்கும் உறைவிடங்கள் திருக்கோவில்களாகும். கட்டிடக்கலை (Architecture), சிற்பக்கலை (Sculpture), ஓவியக்கலை (Painting), சங்கீதக்கலை (Music), நாட்டியக்கலை (Dance) ஆகிய ஐம்பெருங்கலைகள் இங்கு பொலிந்து விளங்குகின்றன, இவற்றைத் தென்னிந்தியச் சைவத் திருக்கோவில்கள் எவ்வாறு போற்றிப் பேணி வந்துள்ளன என்பதை விளக்குவதே இக் கட்டுரைத் தொடரின் தனி நோக்கம்.

"வடமொழி இலக்கிய வரலாறு" என்னும் நூலுக்காக இவ்வாண்டு இலங்கைச் சாகித்திய மண்டலத்தின் பரிசைப் பெற்ற

கலாநிதி கா. கைலாசநாதக் குருக்கள் M. A., Ph. D., அவர்கள் இக்கட்டுரைத் தொடரை எழுதுகின்றார். விரைவில் "கலைச்செல்வி"யில் ஆரம்பமாகின்றது.

உங்கள் பிரதியை முன்கூட்டியே பதிவு செய்துகொள்ளுங்கள்.

விற்பனையாகிறது:-

## எழிலி

(காவியம்)


ஆசிரியர்: கவிஞர் ச. வே. பஞ்சாட்சரம்
விலை: ஒரு ரூபா.

கிடைக்குமிடங்கள்:-

த. தம்பித்துரை, நியூஸ் ஏஜன்ற், யாழ்ப்பாணம்.
இன்பநிலையம், புகையிரதநிலைய வீதி, சுன்னாகம்.
வட லங்கா புத்தகசாலை, பருத்தித்துறை.
ஸ்ரீ கிருஷ்ண விலாசம், கொடிகாமம்.
நவபுத்தகசாலை, மெயின்வீதி, ரக்குவானை,
கலைச்சோலை நூலகம், திருக்கோணமலை.
மணமகன் ஸ்டோர்ஸ், கல்முனை.
முஸ்லிம் ஹோட்டல், கண்டி.
எஸ். எல். சவுந்தரநாயகம், இலுப்பைக்குளம்.
கலாநிதி புத்தகசாலை, மட்டக்களப்பு.
S. சதாசிவம், கந்தகெதரை.
பிறைப்பண்ணை, அக்கரைப்பற்று.

அதிகபிரதிகள் தேவையானோர் எழுதுக.

**பாலன் வெளியீடு,**
செட்டிகுளம்.




ஆடும்
போதும்

பாடும்
போதும்

அழகு
நகைகள்

ஜொலிக்
கட்டும்

மங்கையர் மகிழ, மாசறு பொன்னில்
எங்கள் கடையில் நகைகள் செய்வோம்
இன்றே வாங்குங்கள்

# கே.என். எம். மீருன் சாஹிப்

"தங்கப்பவுண் நகை மாளிகை"

கன்னுதிட்டி,
போன் 585

யாழ்ப்பாணம்.
தந்தி: மன்சூரு



செட்டிகுளம் பாலன் வெளியீட்டு நிலையத்தினரால் கன்னகம்கலாதேவி அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.